# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

ஜீன்-2015

பருவம் 1 புனல் 9



## திட்டமிட்ட இலக்கைத் தாண்டியது



## ஜாதிவெறி கணன்று கொண்டிருக்கும் தளத்தில்
## ஜாதி மறுப்புத் திருமணங்கள்!



## தோழர் மடத்துக்குளம் மோகனின் நேர்காணல்

# “தந்தை இறந்த செய்திகூட நான்கு நாட்கள் கழித்துதான் தெரிந்தது”

**கண்காட்சியில் இரண்டு குழுக்களை மேடை ஏற்றுவார் கோவை இராமக்கிருட்டிணன் என்றுகூறினீர்கள். சற்று விளக்கமாகக் கூறவும்.**

அதாவது அன்று தமிழ்நாடு முழுவதும் இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையின் போது,பத்திரிக்கைகள், தேசியம் பேசிய அரசியல் கட்சிகள், ஈழ வரலாறு-இந்த மண்ணின் பூர்வீக நிலை தெரியாத தமிழ்நாட்டு மக்கள்-அரசியல் கட்சிகள்- பிழைக்கப்போன இடத்தில் தனிநாடு கேட்கலாமா?எனப் பரவலாகப் பேசிக்கொண்ட நிலை இருந்தது.

கோவை காந்திபுரம் பேருந்து நிலையமாக இன்று இருக்கும் இடம் (மத்தியச் சிறைச்சாலை அருகே)முள்செடிப்புதர்கள் நிறைந்தபகுதி. அதைச் சுத்தம்செய்து, அதில் 20 க்கு 60 அளவில் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. நுழைவாயில் முன்பு பட்டுக்கோட்டை பகுத்தறிவாளர் கழகத்தினர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கி-புலி கொண்ட பெரிய விளம்பரப்பலகை அமைத்திருந்தனர்.அதன் ஊடே பொதுமக்கள் உள்ளே சென்று, வரிசை வரிசையாக தமிழீழ வரலாற்றுக்கான புகைப்படங்கள், தமிழீழ நாட்டின் பத்திரிகைச் செய்திகள், அரிய வரலாற்றுப் புகைப்படங்கள், வரலாற்றுச்செய்திகள், புலிகளின் போர்ப்பயிற்சிப் புகைப்படங்கள் என வரிசைப்படுத்திகண்காட்சி அமைக்கப் பட்டிருக்கும். அதைப் பார்த்துவிட்டு வெளியே வரும் மக்கள் ஈழவிடுதலைப் போராட்டம் பற்றி தெளிவான மனநிலையில் வருவார்கள். அந்த அளவுக்கு போராட்ட வரலாற்றை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் கண்காட்சியை அமைத்திருந்தோம்.

இருப்பினும், மாலை நேரத்தில் கண்காட்சியின் பின்புறம் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து அதற்கான விளம்பரச்சுவரொட்டிகள் அச்சடித்து, அனைத்து நகரப்பேருந்துகள் மற்றும் வெளியூர் பேருந்துகளில் ஒட்டி விளம்பரப்படுத்துவோம். அந்தக்கூட்டங்களில் தி.மு.க - அ.தி.மு.க என ஒருநாளும், இந்தியகம்யூனிஸ்ட் - ஜனதாதளம் என ஒருநாளும், ஏனைய சமூகநல அமைப்புகள் - தொண்டு நிறுவனங்கள் என ஒருநாளும் பிரபலமான நபர்களைக் கொண்டு ஈழவிடுதலையில் தமிழக அரசியல் நிலை என

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்



## இணையதளத் தொகுப்புப்பணி

# பெரியார் எழுத்தும்–பேச்சும்


# அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்!

சென்னை ஐஐடி யில் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் என்ற மாணவர் அமைப்புக்கு மத்திய அரசு தடை விதித்தது.அந்தத் தடையை நீக்கக்கோரி ஒரு மாதமாக தமிழ்நாட்டிலுள்ள திராவிடர் இயக்கங்கள், தலித் அமைப்புகள், பொதுவுடைமை அமைப்புகள் போராடின. வேறு வழியின்றி ஐஐடி நிர்வாகம் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்துக்கு தடையை நீக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக ‘படிப்பகங்கள்’ என்பது தமிழர்களின் பண்பாட்டில் ஒரு அங்கமாக விளங்கி வருகின்றன. திராவிடர் இயக்கத்தின் தொடக்க காலம் முதல் படிப்பகங்களோடுதான் நாம் இணைந்து வளர்ந்தோம். தற்போது திராவிடர் இயக்கங்களில் முக்கியப் பொறுப்பாளர்களாகப் பணியாற்றிவரும் தோழர்கள் அனைவருமே தமது பகுதிகளில் பெரியார் படிப்பகங்களை உருவாக்கி இயக்கி வந்தவர்கள்தான்.

திராவிடர் இயக்கம் வீச்சாக இயங்கிய காலங்களில் பெரியார் படிப்பகங்களில் ஏராளமான திராவிடர் இயக்க ஏடுகளைப் படிக்க முடிந்தது.சிறுநூல்களைப் படிக்க முடிந்தது.சிறு சிறு கருத்து விவாதங்கள்,கருத்துப்பரப்பல்கள் நடைபெற பெரியார் படிப்பகங்கள் பெரிதும் உதவின. நாவலர் நெடுஞ்செழியன் நடத்திய ‘மன்றம்’ என்ற ஏட்டுக்கு தமிழ்நாட்டில் பேருந்துகளே இல்லாத கிராமங்களில்கூட வாசகர் மன்றங்கள் இருந்தன. எம்.ஆர்.இராதாவுக்கு மன்றங்கள் இருந்தன. அவை ‘பெரியார் படிப்பகங்களாக’ இருந்தன.

.......தொடர்ச்சி-30 ஆம் பக்கம்



# பறைச்சி எல்லாம் ரவிக்கைப் போட்டுக் கொண்டார்கள்

# என்று பெரியார் பேசியதின் நோக்கம் என்ன?

தோழர் பெரியார்

இன்றைய தினம் பெருமைமிக்க மேயர் அவர்களைப் பாராட்டுவதற்காகக் கூட்டப் பட்ட கூட்டமாகும். இதிலே எனக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது குறித்து மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன். இன்று காலை இருமலுக்காக டாக்டரைப் போய்ப் பார்த்தேன். அவர் மருந்து கொடுத்தார். அதைச் சாப்பிட்டேன் சாயந்திரம் திடீரென்று கைகால் எல்லாம் நடுக்க மேற்பட்டது. மார்பு துடிப்பு 150க்குவந்து விட்டது. சாதாரணமாக 72-75 தான் இருக்க வேண்டும். கைகால் விரல்கள் மடக்கினால் வலிக்க ஆரம்பித்தது.

உடனே டாக்டரிடம் சென்று காண்பித் தேன். அவர் காலையில் கொடுத்த மருந்தின் ரீ-ஆக்ஷன் தான் அது வேறொன்னுமில்லை. உங்களுக்கு வயது அதிகமானதால் கொஞ்சம் அதிகமாக இருந்திருக்கும் வேறொன்றுமில்லை என்று சொல்லி ஒரு ஊசியைப்போட்டு என்னை இரண்டு நாள்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி சொன்னார். சாயந்திரம் பேச வேண்டுமே என்று சொன்னேன். நல்லா பேசுங்க என்று சொன்னார். அதன் பின் தான் கூட்டத்திற்கு வரமுடிந்தது.

நான் கூட்டத்திற்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் போது எனக்கு போன் வந்தது. போனில் பேசியவர்கள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அம்மையாரவர்களை மேயரவர்கள் சாதியைக் குறித்து கேவலமாகப் பேசியதாக குறிப்பிட்டார்கள். அதற்கு நான் அவர் அப்படிச் சொல்லி இருக்க மாட்டார் என்று நினைக்கின்றேன். அவர் படித்தவர் பெரிய பதவி வகிப்பவர் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர். அவர் அப்படிப்பட்ட வார்த்தையை உபயோகித்திருக்க மாட்டார். அப்படி அவர் சொல்லி இருந்தால் நானே கண்டிக்கின்றேன். மன்னிப்பு கேட்கச் செய்கின்றேன் என்று சொன்னேன். மேயரவர்களைக் கேட்டதற்கு நான் சொல்லவில்லை என்று சொன்னார்.

சாதி சம்பந்தமான காரியங்களில் நான் ரொம்ப முயற்சி எடுப்பவன். அதற்காகவே வாழ்வதாகக் கருதுபவன். பறையன் - சக்கிலி - வண்ணான் - பரியாரி என்பது அவமானமல்ல. தொழிலின் காரணமாக வந்தது. பார்ப்பான் தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ள நம்மை இழிசொல்லாக்கி விட்டான். ஆனால் நம் எல்லோரையும் சேர்த்து பார்ப்பான் தேவடியாள் மகன் என்று சொல்கின்றான். சொல்வது மட்டுமல்ல சாஸ்திரத்திலும் அப்படியே எழுதி இருக்கின்றான். சட்டத்திலே (இந்தியாவிலே) தாசிபுத்திரன் என்றே இருக்கிறது. அனுபவத்திலு மிருக்கிறது என்று சொன்னால் கோயிலுக்குப் போகிறவன் அத்தனை பேரும் தேவடியாள் மகன் தானே! இது அண்ணாதுரைக்கும் தான் ராஜா சர் ருக்கும் தான். வேறு பார்ப்பானல்லாத எல்லோருக்கும்தான்.

பறையன் என்று சொல்லக்கூடாது என்று தான் சொன்னார்களே தவிர தண்ணீருக்கு எப்படி ஜலம் என்று சொல்கின்றானோ அதுபோல பார்ப்பான் காந்தியாரைப் பிடித்து பறையன் என்கிறதை நிலை நிறுத்துவதற்காக அரிஜன் என்று சொல்லி இன்னும் அதையே சொல்லிக் கொண்டிருக்கின்றான்.

பறையன் என்று சொல்லக்கூடாது என்று ஆரம்பித்தவன் நான். காந்தியார் தீண்டாதவர்களுக்குத் கிணறு வெட்டுவதற்காகக் காந்தி திலக் நிதியிலிருந்து 55,000 ரூபாய் அனுப்பினார். அப்போது நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவன். நான் அதை இதற்காகச் செலவிடாமல் அப்படியே வைத்துவிட்டேன். மற்ற மாகாணக்காரர்கள் எல்லாம் செலவழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாகக் கேணி, கோயில், பள்ளிக்கூடம் கட்டினார்கள். நான் காந்தியாருக்கு எழுதினேன்.

“நாம் அவர்களுக்கு இவை எல்லாம் தனியாகச் செய்து கொடுப்பதால் ஒருக்காலும் தீண்டாமை ஒழியாது. அதற்குப் பதில் பறையன் கோயில், பறையன் பள்ளிக்கூடம் என்று சொல்லி மக்கள் அதையும் ஒதுக்கிவைத்து விடுவார்கள். இதை நான் விரும்பவில்லை. நம் மக்கள் தண்ணீர் எடுக்க வேண்டும். நம் மக்கள் படிக்கிற பள்ளிகளில் அவர்களையும் படிக்க அனுமதிக்க வேண்டும். நம் மக்கள் போகிற கோயில்களுக்கு அவர்களும் போக உரிமை வழங்க வேண்டும்” என்று எழுதினேன். அதற்கு அவர் அதுபோல செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்.

நான் பறையன் என்று கேவலமாகச் சொன்னதாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் சொல்லியிருக்கின்றார்கள். நான் பல தடவை இந்தச் சொல்லைச் சொன்னாலும் அதை ஒழிப்பதற்காகச் சொன்னதுதான். எலக்சன் போது ராமசாமி நாயக்கர் பறைச்சி எல்லாம் ரவிக்கைப் போட்டுக் கொண்டார்கள் என்று தாழ்த்தப்பட்ட பெண்களைக் கேவலமாக சொன்னார் என்று விளம்பர நோட்டீஸ்களெல்லாம் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களே அவர் ஆதரிக்கிற கட்சிக்கு ஓட்டுப் போடாதீர் என்று வால் போஸ்டர்கள் ஒட்டி இருக்கின்றார்கள். அதைக் கண்டு சிலர் என்னிடம் வந்து நீ எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார்கள். நான் சொன்னது உண்மைத்தான். நான் தாழ்த்தப்பட்ட பெண்கள் இதற்குமுன் ரவிக்கைப் போடக்கூடாது போட்டால் துணியே போடக்கூடாது அப்படி இருந்த சமுதாயம் கால மாறுபாட்டால் எப்படி ஆகி இருக்கின்றது. இன்றைக்கு ரவிக்கையில்லாமல் பார்க்க முடியவில்லை என்று சொன்னேன். இதைக் கொண்டு அந்த இனமக்களை எனக்கு ஓட்டுப் போடாமல் செய்வதற்காகக் கிளப்பி விடப்பட்டதே ஆகும் என்பதை விளக்கியதும் அவர்கள் புரிந்து கொண்டனர்.

இன்று காலை ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தேன். அய்க்கோர்ட் ஜட்ஜ் கைலாசக் கவுண்டரின் மகளுக்கும் ராஜா சர்முத்தய்யா செட்டியாரின் தங்கை மகனுக்கும் (ப.சிதம்பரம்) நடைபெற்ற திருமணம் இதைக் கலப்புத் திருமணம் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை எது கலப்புத் திருமணம் என்றால் மனித ஜாதிக்கும் மிருகத்திற்கும் நடப்பதே கலப்புத்திருமணமாகும்.

ஒரே ஜாதி மனித ஜாதி என்பது மாத்திரமல்லாமல் மணமக்கள் இருவருமே சூத்திர ஜாதி நாலாஞ்சாதியைச் சார்ந்தவர்கள் என்பதோடு நாலாம் சாதி நடுத்தர சாதியாக இருப்பதைப் பற்றிச் சிறிதும் வெட்கப்படாத சாதியைச் சார்ந்தவர்களாவார்கள். நான் தாழ்த்தப்பட்ட பெண்ணிற்கும் பார்ப்பானுக்கும், பார்ப்பனத்திற்கும் தாழ்த்தப்பட்ட ஆணுக்கும் இன்னும் இது போன்று பல சாதி கலப்புள்ள நூற்றுக்கணக்கான திருமணங்களைச் செய்து வைத்திருக்கின்றேன்.

ஜாதி என்பது ஒன்றுதான். இரண்டு பேர்களும் பார்ப்பானுக்கு வைப்பாட்டி பிள்ளைகள் தான். ஜாதியைக் காப்பாற்றத்தான் இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளும் இராஜாஜி கூட தன் மகளைச் சூத்திரரான காந்தியின் மகனுக்குத் தான் திருமணம் செய்து கொடுத்திருக்கின்றார். காங்கிரசினல் காமராஜரும் அவருடைய கம்பெனியும் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும் இராஜாஜியின் சீடர்கள்தான். இராஜாஜி அவர்கள் நம்மோடு தாழ்த்தப்பட்ட மக்கள் வீட்டில் சாப்பிடுவார் தன்னுடைய மகளைச் சூத்திரனான காந்தியின் மகனுக்குக் கொடுத்திருக்கிறார் என்றாலும் பிள்ளைகளை (பேரன்களை) யெல்லாம் பூணூல் மாட்டிப் பார்ப்பானாக்கி விட்டார்.

தேவதாசி வகுப்பைச் சேர்ந்த எம்.எஸ்.சுப்புலஷ்மியை ஜாதியைக் காப்பதற்கென்றே பத்திரிக்கை நடத்துகின்ற கல்கி பத்திரிகையின் அதிபர் சதாசிவம் என்ற பார்ப்பனர் திருமணம் செய்து கொண்டார். அவருக்குத்தான் இராஜாஜி முன்னோடும் பிள்ளையாக இருக்கிறார்.

இப்படி ஏராளமான பெரிய இடம் என்று சொல்லும்படியான இடங்களிலெல்லாம் நடைபெற்று இருக்கிறது. நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பிலேயே மாறுபட்ட ஜாதியைச் சார்ந்த பலரைத் திருமணம் செய்து வைத்திருக்கின்றேன். அதற்கெல்லாம் இராஜா சர் வந்து பாராட்டி இருக்கின்றார். இராஜா சர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். நான் செய்கின்ற காரியங்களை எல்லாம்

பாராட்டுபவர். எனது மதிப்பிற்குரியவர். பணத்தில் மட்டுமல்ல உண்மையிலேயே பெரும்தன்மை வாய்ந்த பெரியவர். அவர் அந்தச் சமுதாயத்தையே திருத்த வேண்டியவராவார். அவர் இத்திருமணத்திற்கு வராததன் மூலம் தனக்கக் கிடைத்த நல்ல வாய்ப்பையே இழந்து விட்டார் என்றுதான் சொல்லுவேன்.

பார்ப்பானைத் தவிர ஜாதியைப்பற்றி பேசுகின்றவன் அத்தனை பேரும் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகனேயாவான். என்னைப் பொறுத்தவரை நான் பறையனாக இருப்பதை கேவலமாகக் கருதவில்லை. சூத்திரனாக இருப்பதைவிட பறையனாக இருப்பதைப் பெருமையாகக் கருதுகின்றேன். எனக்குப் பிள்ளை இல்லை - என்பது பற்றி ரொம்ப சந்தோசப்படுகின்றேன்.

ஒரு சமயம் பிள்ளையிருந்தால் அதுவும் பெண்ணாக இருந்தால் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் மகனுக்குக் கொடுத்திருப்பேன் அல்லது சிவராஜ் மகனுக்குக் கொடுத்திருப்பேன். காதல் மணம் வேண்டுமென்கிற நீ இப்படிச் சொல்லலாமா என்று கேட்பீர்கள். காதல் ஏற்பாடு முன்பே சொல்லிவிடுவேன். இதுபோல தாழ்ந்த சாதிப் பையன்களைப் பார்த்துக் காதல் செய் என்று சொல்லி விடுவேன்.

நாம் ஜாதியை ஒழிக்க வேண்டும். நம் நாட்டில் இரண்டே ஜாதி தான் இருக்கிறது. ஒன்று பார்ப்பான் மற்றொன்று சூத்திரன் இதைத்தான் ஒழிக்க வேண்டும். ஒழியாமல் பாதுகாப்பதற்காகத் தான் பார்ப்பான் நமக்குள் செட்டி, முதலி, நாயக்கர், கவுண்டன், படையாச்சி என்று பல சாதிகளைப் பிரித்து அதில் ஒன்றுக்கொன்று நம்மை ஒன்று சேரவிடாமல் பிரித்து வைத்திருக்கின்றான்.

நாங்கள் தமிழர்கள். சூத்திரர்கள் அல்லர். இந்துக்கள் அல்ல என்கிற உணர்ச்சி நம் மக்களுக்கு வர வேண்டும். இன்றையதினம் இந்தப்பேச்சு பேசியதற்கு அம்மையாரிடம் அய்யா மேயர் அவர்களிடமிருக்கிற அன்பைவிட அதிகமான அன்பு கொண்டிருக்கின்றேன். அம்மையாரும் பெருமைமிகு மேயரும் ஓரே கட்சியைச் சேர்ந்தவர்கள். நமக்குள் இதெல்லாம் இருக்கக்கூடாது.

இந்த தி.மு.க ஆட்சியே உலகமுள்ள வரைக்கும் இருக்க வேண்டுமென்று கருதுகின்றேன். இதைவிட உயர்ந்த எதுவுமே கிடையாது. இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் முதல் வேறு எந்த வெங்காயக் கட்சியும் ஜாதி ஒழிய வேண்டுமென்று வாயால் கூட சொல்வது கிடையாது. தி.மு.க. ஒன்று தான் ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்வதோடு ஒழியப் பாடுபடுகிறது.

காங்கிரஸ் கட்சியில் காமராசர் ஒருவர் தான் ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்பவர். அவர் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர் தீண்டப்படாதவராக இருந்த வகுப்பைச் சார்ந்தவர். அதனால் தான் அவர் ஜாதி ஒழிய வேண்டுமென்கின்றார். மற்ற காங்கிரஸ் காரர்கள் அத்தனை பேரும் ஜாதியைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதுபவர்களே யாவார்கள்.

தி.மு.கழகத்தினர் ஆட்சிக்கு வந்திருக் கிறார்கள் என்றால் வகுப்புவாரியாக அப்படி நடந்து கொள்ளவில்லை என்றாலும் 100-க்கு 97-தமிழர்களுக்குத்தான் கொடுக்கின்றார்கள்.100-க்கு மூன்று தானே பார்ப்பானுக்குக் கொடுக்கிறார் கள். தமிழனாகப் பிறந்தவன் தமிழன் இரத்தம் ஓடுபவனாகப் பிறந்தவன் இரத்தம் இருந்தால் அண்ணாவைத்தான் ஆதரிக்க வேண்டும். அப்படி ஆதரிக்கவில்லை என்றால் அவன் இரத்தத்தில் கோளாறு இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இன்றைய தினம் இருக்கிற முன்னேற்றக்கழகம் தமிழர்களுக்குக் கிடைத்த நல்வாய்ப்பு ஆகும். இவர்கள் தி.மு.க ஜெயிக்கிறவரை இவர்கள் ஒழிய வேண்டுமென்றுதான் பாடுபட்டு வந்தேன். ஏனென்றால் அவர்கள் வெற்றி பெறுகிறவரை இராஜாஜி தான் எங்கள் தலைவர் அவர் சொல்கிறபடிதான் நடப்போம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதனால் இவர்கள் வந்தால் பார்ப்பான் சொல்படி தான் ஆட்சி செய்வார்கள். அதைவிட காங்கிரஸ்காரனே மேல் என்று கருதினேன். ஆனால் இவர்கள் வெற்றி பெற்றதும் தாங்கள் பார்ப்பானின் ஆள் அல்ல தமிழர்கள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள். அதனால் ஆதரிக்க ஆரம்பித்தேன். அதனால் ஒன்றும் நமக்குக் கேடுவரவில்லை நன்மைதான் கிடைக்கின்றது.

இந்த முன்னேற்றக்கழக ஆட்சி இருந்தால் தான் தமிழர் சமுதாயம் முன்னேறமுடியும். காங்கிரஸ் வந்தால் பார்ப்பான் ஆட்சிதான் நடைபெறும். இங்கு ஆட்சிக்கு தமிழன் வந்தாலும் அவன் டில்லியிலிருக்கிற - பார்ப்பான் பார்ப்பனத்தி சொல்கின்றபடிதான் நடக்க வேண்டும். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அதிலுள்ளபடி மனுதரும ஆட்சிதான் சொல்வார்கள். இதை நம் மக்கள் உணர்ந்து தி.மு.க.விற்கு ஆதரவு தர வேண்டும்.

மேயருடைய பாராட்டுக் கூட்டத்தில் உண்மையாக நான் மேயரைப் பாராட்ட

வரவில்லை. நீங்கள் தேர்ந்தெடுக்காதிருந்தால் அவர் எப்படி கவுன்சிலராக முடியும்? வெறும் ஆளாகத்தானே இருப்பார். உங்களுக்குத் தொண்டாற்றக்கூடிய உண்மையாக உழைக்கக் கூடிய சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக் கின்றீர்கள். அதற்காக ஓட்டளித்த உங்களைப் பாராட்டுகின்றேன்.

அதோடு அவரை மேயராகத் தேர்ந்தெடுத்த கவுன்சிலர்களைப் பாராட்டுகின்றேன். பாராட்டுக் கூட்டம் என்பது அவரது கொள்கைகள் பணிகளைப் பாராட்டுவதற் காகத்தான். மற்றும் அவர் பணிகள் இதுவரை தமிழகத்திலோ சென்னையிலோ சேர்மேன்கள் - மேயர்கள் செய்யாத பணியாகும். அப்பணிக்கு நாம் ஆதரவு தர வேண்டும். அவருக்கு உற்சாக மளிக்க வேண்டும்.

இதனால் அவர் கொல்லப்பட்டாலும் அவர் வேலையைவிட்டுப் போனாலும் வெறும் நாராயணனாலும் மக்கள் உள்ளவரை அவர்கள் மனத்திலிருக்கும்படியான காரியத்தினைச் செய்ய ஆரம்பித்து விட்டார். நடைப்பாதைகளில் இருக்கிற கோயில்கள், குடிசைகள், கடைகளை எல்லாம் அகற்ற வேண்டுமென்று உத்தரவு போட்டுக் காரியம் செய்கின்றார். இதனால் சென்னை நகரின் அழகு அதிகமாகும்.

இந்தப் பார்ப்பனர் மட்டுமல்ல.30 வருடங்களுக்கு முன் சத்தியமூர்த்தி என்ற கொலைகார பார்ப்பான் இருந்தார். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் அப்போது ஜஸ்டிஸ் கட்சி அதாவது இன்றைய தி.மு.கழகம் போல் ஆட்சியிலிருந்தது. அப்போது தேவதாசித் தொழிலை நிறுத்த வேண்டுமென்று பொட்டுக்கட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று சட்டசபையில் சட்டம் கொண்டுவந்த போது சத்தியமூர்த்தி அய்யர் தேவதாசி என்பது கடவுளுக்குத் தொண்டு செய்யும் புனிதமான பணி அதை நிறுத்தக் கூடாது என்றார். அப்போது முத்துலட்சுமி அம்மையார் அவர்கள் எழுந்து இதுவரை எங்கள் சகோதரிகள் கடவுளுக்குப் புனிதமான பணியினைச் செய்து வந்தது போதும். இனி உங்கள் சகோதரிகளை வேண்டுமானால் அப்பணிக்கு அனுப்புங்கள் என்று சொன்னார். அதன் பின் சட்டமாக்கப்பட்டது.

அவ்வளவோடு மட்டுமல்ல. அப்போது பெண்களுக்கு 14 வயதுக்கு மேல் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று சாரதா சட்டம் என்கின்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதுவரை சின்னப் பிள்ளைகளுக்கு 7, 8,10 வயதுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமாக இருந்தது. சிறு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஆண்கள் திருமணம் செய்து கொண்ட அன்றே அப்பெண்ணின் பெண்குறியை பேனாக் கத்தியால் அறுத்துவிட்டு புணர்வார்கள்.

சில குழந்தைகள் செத்துப் போயிருக்கின்றன. சில பெண்கள் அந்த புண்ணோடேயே புணர்ச்சியில் ஈடுபடுத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். இதைக்கண்டு வடநாட்டிலிருந்து சாரதா என்பவர் இந்த (சாரதா) சட்டத்தைக் கொண்டு வந்தார். இது மத்திய சட்டசபைக்கு வந்தபோது இதை சட்டம் செய்வதை நான் அனுமதிக்கமாட்டேன்.

சட்டத்தை எதிர்த்து ஜெயிலுக்குப் போனாலும் போவேனே ஒழிய இச்சட்டத்திற்கு நான் கட்டுப்படமாட்டேன் என்று சொன்னவர். வெகு நாள் வரை தன் மகளுக்கு கல்யாணமே செய்யவில்லை. பார்ப்பான் வெள்ளைக்காரனை வேண்டாமென்று சொன்னது அவனோடு ரகளை செய்தது அவன் செய்த சீர்திருத்தத்தால் தான். பார்ப்பான் சிப்பாய்களைத் தூண்டி 1857 இல் நடைப்பெற்ற சிப்பாய்க் கலகத்திற்குக் காரணமும் இதுதான் இப்படி எந்தச் சீர்திருத்தம் ஆரம்பித்தாலும் பார்ப்பான் குறுக்கே படுத்துக் கொள்வான்.

இப்போது ஒரு சட்டம் பெண்களுக்கு 21 வயதுக்கு மேல் திருமணம் செய்ய வேண்டும் அதற்குள் செய்யக்கூடாது என்று வருகிறது. சுதேசமித்திரன் பார்ப்பான் இப்போது என்ன இதற்கு அவசரம் என்று எழுதுகின்றான். எந்தக் காரியம் செய்தாலும் தமிழர்களின் வளர்ச்சிக்கு நலனுக்கு முன்னேற்றத்திற்கானது என்றால் அதனைப் பார்ப்பான் எதிர்த்தே தீருவான். மேயர் அவர்கள் நடைபாதையிலிருக்கிற கோயில் குடிசைகளை அகற்றுவதற்கு எல்லோரும் உதவி செய்து ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டுமா? அதைவிட்டு அகற்றாதே என்று சிபாரிசுக்கு வர வேண்டுமா? இப்படிக் குறுக்கிட்டால் காரியம் எப்படி நடக்கும்? ஜனங்களுக்கு நல்ல காரியங்கள் நன்மைகள் செய்ய வேண்டுமானால் நல்ல பெயர் எடுக்க முடியாது துணிந்து செய்ய வேண்டியது தான்.

**11.12.1968 அன்று சென்னை - அயன்புரத்தில் தோழர் பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு. விடுதலை 15. 12. 1968 -பெரியார் களஞ்சியம், தொகுதி 18- 'ஜாதி-தீண்டாமை' பாகம்- 12 பக்கம் 73**

நன்றி-தமிழ்ஓவியா



# 1000 காட்டாறு
## திட்டமிட்ட இலக்கைத் தாண்டியது





## ஜாதிவெறி கனன்று கொண்டிருக்கும் தளத்தில்
# ஜாதி மறுப்புத் திருமணங்கள்!

பொள்ளாச்சி மாவட்ட, திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 17.05.2015 (ஞாயிறு) மாலை 5 மணியளவில் கிணத்துக்கடவு, அண்ணா திடலில் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் வெளிவரும் அறிவியல் பண்பாட்டு மாத இதழான காட்டாறு ஆண்டுக்கட்டணம் வழங்கும் விழா- எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் பயண நிறைவு விழா- கழகத் தோழர்கள் பொள்ளாச்சி மாவட்ட கழகச் செயலாளர் தோழர் கிணத்துக்கடவு நா.வே. நிர்மல்குமார்- கோவை மாநகரத் தோழர்.வீ.இந்துமதி ஆகியோரது ஜாதி, தாலி, சடங்கு மறுப்புத் திருமண விழா என முப்பெரும் விழா பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 29 நாட்களுக்கு முன்பாக, அதாவது கடந்த 19.4.2015 ஞாயிறு மாலை 4 மணி அளவில், கிணத்துக்கடவு காவல்நிலைய ஆய்வாளரிடம், முப்பெரும் விழா பொதுக்கூட்டம், நடத்திட அனுமதி கோரி, மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் தோழர்கள் விஜயராகவன், நிர்மல்குமார் ஆகியோர் நேரில் விண்ணப்பம் அளித்தனர். காவல் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், பொதுக் கூட்டம் குறித்து பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் கேட்டனர். சுமார் 1 மணி நேரத்திற்கு மேல் அவர்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் கழகப் பொறுப்பாளர்கள் பதிலளித்தனர்

30.4.2015 அன்று காவல்நிலைய ஆய்வாளரை அணுகி அனுமதி கேட்டபோது பேரூர் காவல் உட்கோட்டம், காவல்துறை துணைக் கண்காணிப்பாளரை (DSP) நேரில் அணுகி அனுமதி கோருமாறு பதில் கூறினார். 1.5.2015 அன்று பொள்ளாச்சி, கோவை மாநகரத் தோழர்கள் விஜயராகவன், நிர்மல்குமார், இராமு, நேருதாஸ் ஆகியோர் காவல்துறை துணைக் கண்காணிப்பாளரை, அவரது அலுவலகத்தில் சந்தித்து, நிகழ்வுக்கு அனுமதி கேட்டபோது அவரும், பல்வேறு கேள்விகளைக் கேட்டுவிட்ட இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையத்தை அணுகுமாறு கூறிவிட்டார் .

4.5.2015 மாலை 6 மணியளவில் கிணத்துக்கடவு காவல்நிலைய ஆய்வாளரிடம் நேரில் அணுகி, அனுமதி தொடர்பாகக் கேட்டபோது அவர் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் (SP) நேரில் அணுகுமாறு பதில் கூறினார். அப்போது 19.4.2015 அன்று அனுமதி கோரி வழங்கப்பட்ட விண்ணப்பத்திற்கு ஏற்புச்சீட்டு வழங்குமாறு கேட்டதற்கு அப்படிக் கொடுக்கும் பழக்கம் நடைமுறையில் இல்லை என காவல்நிலைய ஆய்வாளர் மறுத்துவிட்டார்.

அவருடைய நடவடிக்கைகள் நிகழ்ச்சியை தடைப்படுத்தும் நோக்கத்தோடு அமைந்திருந்தது. மேலும் கூட்டத்திற்கு அனுமதியோ அல்லது அனுமதி மறுப்போ எழுத்துப் பூர்வமாகத் தருமாறு வேண்டுகோள் வைக்கப் பட்டது.மேலிடத்தில் இருந்து வந்தால் தருவேன்; என்னால் தர இயலாது என்று பதில் கூறினார்.

உடனடியாகக் கழகத் தலைவரோடு தொடர்பு கொண்டு மேற்கண்ட நிகழ்வுகளைக் கூறி, காவல்துறை கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கத் திட்டமிட்டிருந்ததை எடுத்துக்கூறி மேல்நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகள் கேட்கப்பட்டது. கழகத் தலைவர் கழக வழக்கறிஞர் தோழர். ஆர்.திருமுர்த்தி அவர்களை மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு காவல்துறையிடம் அனுமதிகோரி வழக்குத் தொடர ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இதனிடையே 10.5.2015 மாலை 3 மணி அளவில் மாவட்டக் கழகத் தலைவர் விஜயராகவனை கிணத்துக்கடவு காவல் ஆய்வாளர், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மாவட்ட காவல் துணைக் கண்காணிப் பாளர் அவர்களின் செயல்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ள வருமாறு கூறினார். மாவட்டச்செயலாளர் தோழர். நிர்மல்குமார் காவல்நிலையம் சென்று செயல் முறை ஆணையை கையெழுத்திட்டு பெற்ற பின், அது அனுமதி மறுப்பு ஆணை எனத் தெரிய வந்தது.

காவல்துறையின் அனுமதி மறுப்பை முறையே கழகத்தலைவர், கழகப்பொதுச் செயலாளர், வழக்கறிஞர் ஆகியோருக்கும், கழகத்தின் வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக மாத ஏடான காட்டாறு ஆகியவற்றுக்கும் மின்னஞ்சல் முலம் அனுப்பப்பட்டது.

10.5.2015 அன்று மாலையே அனுமதி மறுப்பு ஆணையுடன் நிர்மல்குமார் சென்னைப் புறப்பட்டு, 11.5.2015 அன்று கழகவழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களைச் சந்தித்து, சென்னை உயர்நீதிமன்றத்தில், காவல்துறையின் அனுமதி மறுப்புக்கு எதிராகவும், பொதுக்கூட்டம் நடத்திட அனுமதி கோரி, வழக்குத் தொடரப்பட்டது.

14.5.2015 அன்று சென்னை உயர்நீதிமன்றம், முப்பெரும்விழா பொதுக்கூட்டத்துக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டது. உடன் தமிழகம் முழுவதும் உள்ள கழகத் தோழர்களுக்கு குறுஞ்செய்திமூலம் அனுமதி பெறப்பட்ட தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. தோழமை அமைப்பான அம்பேத்கர் இளைஞர் முன்னணி சார்பில் பொதுக்கூட்டம் தொடர்பான சுவரொட்டிகளைத் தானே அச்சிட்டு வழங்குவதாக அதன் நிறுவனர் தோழர் கவி.மணிமாறன் பொறுப்பேற்றுக் கொண்டார் .

இதனிடையே கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் 14.5.2015 இதழில் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் காவல்துறை எல்லை மீறுகிறது என்ற தலைப்பில் கண்டன அறிக்கை எழுதியிருந்தார். இதனைப் படித்த கழகத் தோழர்கள் தமிழகம் முழுவதும் இருந்து தோழர் நிர்மல்குமாரைத் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் கழகத்தோழர்கள் உடுமலை குணசேகரன், கவிதா, இராமு, தீனா, கோவை மாநகரத்தலைவர் நேருதாஸ் ஆகியோர் முழுவீச்சில் விழாசிறக்கக் களப்பணி யாற்றினார்கள்.

17.5.2015 அன்று முப்பெரும் விழா நோக்கங்களை விளக்கி பெரிய அளவில் விளம்பரப் பதாகை அமைத்து வண்ணமயமான பெரிய மேடையில் நிகழ்ச்சிகள் துவங்கின. கழகப் பொதுச் செயலாளரின் கண்டன அறிக்கை நிகழ்ச்சி நிரல் ஆகியவை அச்சிடப்பட்டு திரண்டிருந்த பொது மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. மேடைக்கு முன்புறமாக சாலையின் இருபுறங்களிலும் பொதுமக்கள் திரளாகத் திரண்டிருந்தனர் மேடையைச் சுற்றியிருந்த மாடிகளின் மேற்புறத்தில் பெண்கள் அதிகளவில் திரண்டு கழக நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தனர்.

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் கோவை மாவட்ட அமைப்பாளர் தோழர் அ.ப.சிவா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். முதல் நிகழ்வாக காட்டாறு மாத இதழுக்கான ஆண்டுக்கட்டண வசூல்பணியை 100 விழுக்காட்டிற்கும் மேல் நிறைவு செய்து, சேலம் மண்டல அமைப்பாளர் தோழர் கொளத்தூர் குமார் தலைமை ஏற்று தோழர்கள் புடைசூழ , நிர்ணயித்த இலக்கான 1000க்கும் அதிகமாக 1117 இதழ்களுக்கான சந்தாக்கள் கழகத்தலைவர் அவர்களிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

தோழர்கள் நிர்மல்குமார்-இந்துமதி ஆகியோரின் ஜாதி - தாலி - சடங்கு மறுப்புத் திருமண விழா,மடத்துக்குளம் தோழர்.வெ.ஜோதி அவர்கள் திராவிடர் வாழ்வியல் பண்பாட்டு உறுதிமொழியை வாசிக்க, தோழர்களோடு பொதுமக்களும் இணைந்து உறுதியேற்றனர்

விழாவிற்குக் கழகத்தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமை ஏற்றிட, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர். இரஞ்சிதா வரவேற்புரை ஆற்றினார்.

பொள்ளாச்சி மாவட்ட கழகத் தலைவர் தோழர் விஜயராகவன், சட்ட எரிப்புப் போராளி தோழர். ஆனைமலை ஏ.கே.ஆறுமுகம் அவர்களை அறிமுகப்படுத்தியும், காவல்துறை ஏற்படுத்திய தடைகள் குறித்தும் கழக வழக்கறிஞர் தோழர்.ஆர். திருமூர்த்தி அவர்களின் முனைப்பான பணியின் காரணமாக அனுமதி பெற்றது குறித்தும், தந்தை பெரியாரின் பெரும்பணி காரணமாக திராவிடர்கள் பெற்ற கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநீதி ஆகியவற்றை பிற மாநிலங்களை விட தமிழகம் முன்னணியில் இருப்பது குறித்தும் பேசினார்.

முனைவர் ஆ. புரட்சிக்கொடி, தோழர் பூங்குழலி, காட்டாறு ஆசிரியர் குழுத் தோழர்கள் மருத்துவர் பெரியார்செல்வி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் வீ.சிவகாமி ஆகியோர் ஜாதி - தாலி மறுப்புக் குறித்தும் பெண்விடுதலைக்காக தோழர் பெரியார் அவர்களின் பணி குறித்தும் மிக நீண்ட விளக்க உரை நிகழ்த்தினார்கள். தோழர் இந்துமதி அவர்கள் பெண்ணே, பெண்ணே போராடு என்ற பாடலை உணச்சிப்பூர்வமாகப் பாடினார்.

கழக வழக்கறிஞர் தோழர். ஆர்.திருமூர்த்தி அவர்கள் வழக்கு நடத்திய விதம் குறித்தும், காவல்துறையின் அத்து மீறிய போக்கைக் கண்டித்தும், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை மேற்கோள் காட்டியும், கழகத் தோழர்களின் ஈடு இணையற்ற ஜாதிஒழிப்பு, சமூகப் பணிகள் குறித்தும் பெரியாரின் பெரும்பணியால் அடைந்த நன்மைகள் குறித்தும், தோழர் நிர்மல் குமாரின் கொள்கை உறுதியையும் விளக்கமாக உரை நிகழ்த்தினார். வழக்கறிஞருக்கு பெரியார் - சுயமரியாதை சமதர்மம் மற்றும் ஆங்கில நூல் ஒன்றும் நிகழ்வின் நினைவாக வழங்கப்பட்டது.

சென்னிமலை ஒட்டப்பாறை பகுதியைச் சேர்ந்த இணையர் தோழர்.ஜோதிமணி-தேவராஜ் ஆகியோரின் மகள் தோழர்.கவிப்பிரியாவுக்கும், ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் துணைச் செயலாளரும், சென்னிமலை பசுவபட்டி திருவள்ளுவர் நகரைச் சார்ந்த இணையர் செல்வராஜ்-பழனியம்மாள் ஆகியோரது மகன் தோழர். இசைக்கதிர் ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஏற்பு மேட்டூரில் கழகத்தலைவர் அவர்களின் இல்லத்தில், கடந்த 7.5.2015 அன்று கழகத்தோழர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வாழ்க்கைத் துணை ஏற்பை இந்த மேடையிலேயே தோழர் கொளத்தூர்மணி அவர்கள் அறிவித்து இணையர்கள் கவிப்பிரியா-இசைக்கதிர் ஆகியோரைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தினார். இணையர்கள் கவிப்பிரியா-இசைக்கதிர் மற்றும் தோழர் சென்னிமலை செல்வராஜ் ஆகியோர் இந்த நிகழ்வின் நினைவாக கழக வளர்ச்சிக்கு ரூ.5000/- நன்கொடை வழங்கினார்கள்.

திருப்பூர் மாவட்டச் செயலாளர் தோழர்.முகில்ராசு-அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் வீ.சிவகாமி ஆகியோரது மகள் தோழர்.கனல்மதியின் பிறந்த நாளை முன்னிட்டும், இணையேற்புவிழா மகிழ்வைப் பங்குபெறவும் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்கள். பின்னர் கழகத் தலைவர் அவர்கள் இணையேற்பு இணையர்களுக்கு உறுதிமொழியை ஏற்கச் செய்து ஜாதி, தாலி,சடங்கு குறித்தும் வாழ்க்கைத் துணைநல ஏற்பு குறித்தும், காவல்துறைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பல்வேறு வழக்குகளின் தீர்ப்புகளை மேற்கோள் காட்டியும், எதிர்காலம் பெரியார் கொள்கையை ஒட்டியே திராவிடர்கள் தங்களுடைய வாழ்க்கைப் பண்பாட்டு முறைகளை ஏற்றுக் கொள்வார்கள் என்றும் விளக்கமாக உரையாற்றினார் .

இந்த நிகழ்வின் நினைவாக இணையர்கள் நிர்மல்குமார்- இந்துமதி ஆகியோர் காட்டாறு மாத இதழுக்கு ரூ.1000/-மும், புரட்சிப் பெரியார்முழக்கம் இதழுக்கு ரூ.1000/-மும் நன்கொடையாக வழங்கினார்கள். தமிழகம் முழுவதிலுமிருந்து வந்து திரண்டிருந்த தோழர்கள்,கொள்கைவழி உணர்ச்சிவயப்பட்ட நிலையில் மணமக்கள் வாழ்க, சட்ட எரிப்புப் போராளி ஆறுமுகம் வாழ்க, எந்த விலை கொடுத்தேனும் ஜாதியை ஒழிப்போம் என்று முழக்கமிட்டனர் கிணத்துக்கடவு தோழர் கோமதி நன்றிரையுடன் முப்பெரும் விழா நிறைவு பெற்றது.

-பொள்ளாச்சி விஜயராகவன்

**வரலாறு**

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் அருகே உள்ள அம்மாபட்டியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது திருமண ஊர்வலத்தில் மோட்டார் வண்டியைப் பயன்படுத்தியுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் மோட்டார் வண்டியைப் பயன்படுத்தக்கூடாது என்று மிரட்டி, அதை மீறுபவர்களைத் தாக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடந்தன. கிறிஸ்தவ வன்னியர்கள் அப்பகுதியில் ஆதிக்கம் செய்துவந்தனர். அவர்களை எதிர்த்துப் போராடி தாழ்த்தப்பட்டோருக்கு மோட்டார்வண்டி பயன்படுத்தும் உரிமையைப் பெற்றுத் தந்தது சுயமரியாதை இயக்கம். *குடி அரசு 19.09.1928*

தமிழில்: பிரபாகரன் அழகர்சாமி







# உத்திரப்பிரதேச அதிகார மய்யங்களின் பார்ப்பன ஆதிக்கம் 3

## 4. திறனாய்வு / அலசல்

இந்தக் கணக்கெடுப்பின் முடிவுகள் நம் அனைவரிடமும் நிச்சயம் ஒருகேள்வியை எழுப்புகிறது. எப்படி உயர்ஜாதியினரால் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் பெரும்பங்கினைக் கைப்பற்ற முடிகிறது? பொதுவாக இதற்குப் போலியான சில காரணங்கள் சொல்லப்படுகிறது. அதுவும் பெரும் பாலும் உயர்ஜாதிக்காரர்களாலேயே இவை முன்வைக்கப்படுகின்றன. அதாவது இந்த உயர் பதவிகளுக்குத் தேவையான தகுதியும் திறமையும் கொண்டவர்கள், பின்தங்கிய சமூகத்தில் வேண்டிய அளவு இல்லை என்பது பொதுவாகச் சொல்லப்படுகிறகாரணம். சிலபதவிகளுக்குக் கூடுதல் கல்வித்தகுதி தேவை என்பது உண்மைதான். ஆனால் பொதுவாகவே உயர்ஜாதியினர் தங்களுக்குச் சற்று அதிகத்தகுதி இருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

இது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம்தானா என்பது குறித்து சற்றுவிரிவாகப் பார்ப்போம். 2004- 05 ஆம்ஆண்டின் இந்திய மனிதவளர்ச்சிக் கணக்கெடுப்பு முடிவுகளின்படி, உத்திரபிரதேச மாநிலத்தின் பல்வேறு சமூகக்குழுக்களின் கல்விவளர்ச்சிநிலை குறித்த புள்ளிவிபரத்தை அட்டவணை - 5இல் காண்க. நாம் எதிர்பார்த்தது போலவே, 18 வயதுக்கு மேற்பட்டோரில் பட்டதாரிகளின் விகிதத்தைப் பார்த்தோமானால், தலித்துகள், முஸ்லிம்கள், இதரபிற்படுத்தப்பட்டோர் சமூகங்களைவிட மிகஅதிகமாக உயர்ஜாதியினர் எண்ணிக்கை உள்ளது.

உத்திரபிரதேச மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்குமட்டுமே இருக்கிற உயர்ஜாதியினர்,மொத்தப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட இரண்டில் ஒருபங்கினைப் பெற்றிருக்கிறார்கள்.பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் மற்றும் முஸ்லீம் உள்ளிட்ட அனைத்துச் சமூகத்தையும் சேர்ந்த பட்டதாரிகள், மொத்தப் பட்டதாரிகள் எண்ணிக்கையில் இரண்டில் இன்னொரு பங்கினைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே பின்தங்கிய சமூகங்களில் அரசுப்பணிக்குத் தகுதிபடைத்தவர்கள் போதிய அளவு இல்லை என்பது ஏற்புடையது அல்ல.

அட்டவணை - 5:

உத்திரப்பிரதேசத்தில் வெவ்வேறு சமூகக்குழுக்களின் கல்வி வளர்ச்சிநிலை (2004 - 05)

18வயதுக்கு மேற்பட்டோர்(%) 18வயதுக்கு மேற்பட்டோரில் பட்டதாரிகள் (%)

பட்டதாரிகளின் மொத்த மக்கள் தொகையில் பங்கு

| | | | |
|---|---|---|---|
| உயர் ஜாதியினர் | 21 | 16.3 | 49 |
| பிற்படுத்தப்பட்டோர் | 37 | 4.7 | 27 |
| முஸ்லீம்கள் | 19 | 3.8 | 11 |
| தலித்துகள் | 22 | 3.0 | 10 |
| மற்றவர் | 1 | 3.6 | 3 |
| மொத்தம் | 100 | 6.5 | 100 |

மற்ற சமூகத்தினரைவிட, ஒப்பீட்டளவில் உயர் ஜாதியினர் அதிக எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் அதிகப்பட்ச கல்வியையும் பெற்றிருக்கிறார்கள் என்பது, அவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களைப் பெரிய அளவில் கைப்பற்றுவதற்கான முக்கியமான காரணமாக நாம் கொள்ளமுடியும்.

உதாரணத்திற்கு எழுத்தர் மற்றும் எழுத்துப்பணி உதவியாளர் போன்ற பணிகளில் பல்வேறு சமூகத்தினர் கொண்டிருக்கும் பங்கு என்பது அந்தந்தச் சமூகப்பிரிவினரில் உள்ள பட்டதாரிகளின் விகிதத்தோடு ஓரளவு பொருந்திப்போவதைக் காணமுடிகிறது.

(காண்க :அட்டவணை 2 மற்றும் 5).

எனவே, கருத்தளவில் பார்த்தால், பின்தங்கிய சமூகங்களுக்கு நல்லஅளவில் கல்விவாய்ப்புகள் கிடைக்குமானால், அவர்கள் வேலைவாய்ப்புகளிலும் உயர்பதவிகளிலும் தங்களுக்கு உரியபங்கினைப் பெறமுடியும். ஆனால் கல்விவாய்ப்புகளை பெறுவதிலும் அதிலும் குறிப்பாக தரமான கல்வியைப் பெறுவதிலும், சமூகத்தில் மிகப்பெரிய அளவில் சமத்துவமின்மை நிலவுகிறது. அதுவே அரசு நிறுவனங்களிலும் பொதுஅமைப்புகளிலும் உயர்ஜாதியினர் ஆதிக்கம் செலுத்தும் அளவிற்கு அவர்களைக் கொண்டுசெல்கிறது. அனைவருக்கும் சமமான அதே சமயம் தரமான கல்வியை வழங்குவதே இத்தகைய சமூக அநீதிக்கு எதிரான சக்திவாய்ந்த ஆயுதமாக இருக்கும்.

**ஜாதி குறித்த எந்த எண்ணமும் இல்லை, ஜாதிய உணர்வெல்லாம் எதுவும் எங்களுக்கு இல்லை என்பவர்கள், முதலில் அதைக் காட்டுவதற்குத் திருமணம் என்பதைவிடச் சிறந்த இடம் வேறுஏது? ஆனால், உண்மையில் இங்கே அகமணமுறைதான் பொதுவிதியாக இருப்பது, உயர்ஜாதியினர் பெரும்பாலும் ஜாதி உணர்வை விட்டுவிடவில்லை என்பதைக் காட்டுகிறது. "**

அதிக எண்ணிக்கையில் கல்விபெற்றிருப்பது, அதிகபட்சக் கல்வியைப் பெற்றிருப்பது என்பதுடன் கூடவே, உயர்ஜாதியினரிடம் மிகவலுவான மிகப்பரவலான ஒரு வலைப்பின்னல் இருக்குகிறது. உயர்ஜாதியினர், செல்வாக்குமிக்க பதவிகளில் உள்ள நண்பர்களையும் நலம்விரும்பிகளையும் பெற்றிருப்பது வெறுமனே அவர்களுடைய கல்வித்தகுதியினால் மட்டுல்ல, அவர்களுடைய ஜாதி மற்றும் குடும்ப உறவுகளினாலும்தான்.

அலகாபாத் போன்ற பகுதிகளில் உயர்ஜாதியினர் பல சலுகைகளைப் பெறுவதிலும், வேலைவாய்ப்புகளைப் பெறுவதிலும், அதிகாரமிக்க பதவிகளைப் பெறுவதிலும், அவர்களிடம் இருக்கிற இத்தகைய வலைப்பின்னல் பெரும்பங்கு வகிக்கிறது என்பதை நாம் எளிதில் கண்டுணர முடியும். பல ஆய்வாளர்களும் இதுகுறித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்த வலைப்பின்னலைக் கொண்டு அரசு நிறுவனங்களிலும் பொது அமைப்புகளிலும் அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களைக் கைப்பற்றி அவற்றைத் தங்கள் கோட்டையாகவே மாற்றியிருக்கிறார்கள் உயர்ஜாதியினர்.

உயர்ஜாதியினருக்குள் இருக்கும் சமூக வலைப்பின்னல் என்பதன் கூடவே, பின்தங்கிய ஜாதியினர் மீது சமூகத்தில் நிலவும் பொதுவான பாகுபாடு என்பதும் சேர்ந்து, அதிகார மய்யங்களில் இடம்பெறவதில் இருந்து அவர்களை ஒதுக்கிவைக்கிறது. ஜாதி அடிப்படையிலான பாகுபாடுகள் ஒதுக்கல்கள் என்பவை பள்ளிக்கூடங்களில் இருந்தே தொடங்கிவிடுகிறது. வேலைவாய்ப்புகளில் அதுவே எதார்த்த நடைமுறையாக இருக்கிறது. பணிவிண்ணப்பங்களில் விண்ணப்பதாரரின் பெயரில் இருந்து ஜாதியை அடையாளம் கண்டு, அதன்மூலம் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதில் பாகுபாடுகள் இருப்பதாகச் சமீபத்திய ஆய்வுமுடிவுகள் தெரிவிக்கின்றன.

இறுதியாக, அரசுநிறுவனங்களில் இடஒதுக்கீடு விதிமுறைகளைச் சரியாக நடைமுறைப்படுத்தாததும் அல்லது அதில் முறைகேடுகள் செய்யப்படுவதாலும், அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் உயர்ஜாதியினர் தங்களுக்கு உரிய இடங்களைவிட மிக அதிக இடங்களைப் பெறமுடிகிறது. இதுகுறித்து விரிவான ஆய்வினை நாங்கள் செய்யவில்லை, என்றாலும் அலகாபாத்தில் அரசு நிறுவனங்களில் இடஒதுக்கீடு விதிகளை மீறுவதற்குச் செய்யப்படும் பல தந்திரச்செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டோம்.

உதாரணத்திற்கு, ஒரு கல்விநிறுவனத்தில், ஒவ்வொரு துறையிலும் நியமிக்கப்படும் ஆசிரியர்களில் மூன்றில் ஒரு இடம் பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கே, அந்தத்துறைக்குள்ளேயே சிறுசிறு மய்யங் களாகப் பிரித்து, ஒவ்வொரு மய்யத்திற்கும் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களை மட்டுமே நியமனம் செய்து, மூன்றாவது ஆசிரியருக்குத் தேவையில்லாதது போல அமைத்து விடுகிறார்கள்.

அதாவது துறையளவில் ஆசிரியர் நியமனம் என்பதில்லாமல், மையஅளவில் ஆசிரியர் நியமனம் என்று தேவைப்படும் ஆசிரியர் எண்ணிக்கையைச் சுருக்குவதை ஒரு யுத்தியாகப் பின்பற்றுகிறார்கள். இதுபோல, இடஒதுக்கீடு விதிகளை மீறுவதற்கு முறைகேடான பலவழிகளை அலகாபாத்தின் அரசுநிறுவனங்களில் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் பங்குபெறுவதில் உள்ள இது போன்ற தடைகளைப்பற்றியேகூட தனியாக ஆய்வுசெய்ய வேண்டிய தேவையிருக்கிறது.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. அலகாபாத்தில், அரசுநிறுவனங்களின் அதிகார மையங்களில், சமூகரீதியான பன்முகத்தன் மையை ஏற்படுத்தவேண்டும் என்று உயர்ஜாதி யினரிடம் இருந்து எந்தவொரு முயற்சியும் உருவாகவில்லை. பத்திரிக்கையாளர் சங்கம், வழக்கறிஞர் சங்கம், அரசுசாரா நிறுவனங்கள் போன்றவை தங்கள் அமைப்புகளுக்குள் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒதுக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய மறுப்பதுஏன்?

இப்படியெல்லாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகவோ, அப்பாவித்தனமாகவோ தெரியலாம். ஆனால், பொது அமைப்புகளிலும், அரசுநிறுவனங்களிலும் அனைத்துச் சமூகத்தினருக்கும் சமவாய்ப்பு வழங்கவேண்டும். பன்முகத்தன்மை நிலவவேண்டும் என்ற எண்ணமும் அதை உறுதிசெய்யவேண்டிய தன்னிச்சையான செயல்பாடுகளும் உலகெங்கும் பொதுவிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியாவில்கூட சில ஊடக நிறுவனங்களில், நிர்வாகமே தன்னிச்சையாக சில முயற்சிகளைச் செய்திருக்கிறது.

ஆனால் அலகாபாத்திலோ இதுவே தலைகீழாக நடக்கிறது. அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களை அடைவதில் தங்களுக்கு இருக்கும் வாய்ப்புகளையும்

**“ அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களை அடையவிடாமல், பின்தங்கிய சமூகத்தினர் தொடர்ந்து ஒதுக்கப்படுவது என்பது, இன்னும் தீவிரமாகப் பரவலாக இடஒதுக்கீடு கொள்கைகளை நடைமுறைப் படுத்த வேண்டியிருப்பதை உணர்த்துகிறது.**

சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதில் உயர்ஜாதியினர் உறுதியாக இருக்கின்றனர். இடஒதுக்கீடு விதிகளுக்கு எதிராக அவர்கள் செய்கிற முறைகேடுகள் வெளிப்படையாகத் தெரிகிற சான்றுகள்.

வெளிப்படையாக தீர்மானித்துச் செய்யப்படுகின்ற இதுபோன்ற காரியங்கள் மட்டுமல்லாமல், ஜாதிய நலன்களைச் சலுகைகளைப் பாதுகாப்பதில் நடைமுறையில் இருக்கும் வேறுசில செயல்பாடுகளும் துணைபுரிகின்றன.

அதில் முக்கியமானது அகமண முறையாகும். ஒரு உயர்ஜாதிக்காரர், எந்தவொரு காரணமும் இல்லாமல் தன் சொந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்துகொள்வது, இந்த ஜாதிய அமைப்பையும், அதில் உயர் ஜாதியினர் அனுபவித்துவரும் சலுகைகளையும் நிலைத்திருக்கவே துணைபுரிகிறது. சிலருக்கு நியாயமான காரணம் இருக்கலாம், அதாவது அவர் விரும்பியவரும் அவருடைய சொந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். ஆனால் எந்தஒரு காரணமும் இல்லாமல், அகமணமுறை என்பது ஒரு பொதுவிதியாக இங்கே கடைபிடிக்கப்படுவது ,ஜாதியப் பாகுபாட்டைச் செயல்படுத்தும் ஒரு வடிவம் தான்.

ஜாதிகுறித்து உயர்ஜாதியினர் பொதுவாகக் கொண்டிருக்கும் மனநிலையைக் குறிப்பிட்டாக வேண்டும். அதிகாரத்தில் அனைத்துச் சமூகத்தினரும் பங்கேற்கும் பன்முகத்தன்மையை உறுதிசெய்வதற்குத் தன்னியல்பாக அனைவரும் அக்கறை காட்டவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தபோது, உயர்ஜாதியைச் சேர்ந்தவர் கள் இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. நாங்கள் கண்டவரை, உயர்ஜாதியினர் பலர் தங்களுக்கு ஜாதி உணர்வெல்லாம் எதுவும் இல்லையென்று தங்கள் நல்லெண்ணத்தை எண்ணிப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள்.

ஜாதிஉணர்வைக் கடந்தநிலைக்குப் போவதென்பது, உண்மையில் ஜாதிய ஏற்றத்தாழ்வுகளை எதிர்ப்பதற்குத்

தேவையானதுதான். ஆனால், ஜாதிகுறித்து எனக்கு எந்த அக்கறையும் இல்லை என்று சொல்வதோ அல்லது அப்படி வெறுமனே காட்டிக்கொள்வதோ, உண்மையில் உயர்ஜாதியினரின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது என்பது மட்டுமல்லாமல் உயர்ஜாதியினரின் ஆதிக்கத்தை எதிர்ப்பதைத் தடுக்கிறது.

ஜாதி குறித்த எந்த எண்ணமும் இல்லை, ஜாதிய உணர்வெல்லாம் எதுவும் எங்களுக்கு இல்லை என்பவர்கள், முதலில் அதைக் காட்டுவதற்குத் திருமணம் என்பதைவிடச் சிறந்த இடம் வேறுஏது? ஆனால், உண்மையில் இங்கே அகமணமுறைதான் பொதுவிதியாக இருப்பது, உயர்ஜாதியினர் பெரும்பாலும் ஜாதி உண்ர்வை விட்டுவிடவில்லை என்பதைக் காட்டுகிறது.

## 5 முடிவுரை

அலகாபாத்தில், அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களில் உயர்ஜாதியினர் மிக அதிக அளவில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதேசமயம், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட ஜாதியினர் / சமூகத்தினர், அதிக அளவில் கடைநிலைப் பணிகளிலும் கண்ணியக் குறைவானதாகக் கருதப்படுகிற பணிகளிலும் இடம் பெற்றிருக்கிறார்கள். பின்தங்கிய சமூகத்தினரால், பொது நிறுவனங்களில் உரிய பங்கினைப் பெற முடியாமல் இருப்பது, அவர்கள் காலந்தோறும் வாய்ப்புகள் மறுக்கப்படுவதை மட்டும் காட்டவில்லை, முன்னேறிய ஜாதியினர் தொடர்ந்து கடைபிடிக்கும் எதிர்ப்புணர்வையும் காட்டுகிறது.

இந்தச் சூழ்நிலை மிக மோசமான சமூகப் பின்விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. வாய்ப்புகளைப் பெறுவதில் அனைவருக்கும் சமஉரிமை உண்டு என்கிற அரசியல் அமைப்பு வழங்கியிருக்கிற உரிமைக்கு எதிரானதாக இருக்கிறது. பின்தங்கிய ஜாதியினரின் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. பொருளாதார சமத்துவமின்மையையும், வர்க்கப் பிரிவனையையும் வலுப்படுத்துகிறது. சமூகத்தில் நிலவுகிற இத்தகைய பாகுபாடுகள் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியத்தடையாக இருக்கிறது. மிக முக்கியமாக, அதிகாரம் மிக்க இடங்களெல்லாம் உயர்ஜாதியினர் பிடியில் இருப்பது, ஜாதியப் படிநிலைச் சமூகத்தை நிலைத்திருக்கச் செய்கிறது.

அதிகாரமும் செல்வாக்கும் மிக்க இடங்களை அடையவிடாமல், பின்தங்கிய சமூகத்தினர் தொடர்ந்து ஒதுக்கப் படுவது என்பது, இன்னும் தீவிரமாகப் பரவலாக இடஒதுக்கீடு கொள்கைகளை நடைமுறைப் படுத்த வேண்டியிருப்பதை உணர்த்துகிறது. மேலும், அனைவருக்கும் சமமான தரமான கல்வி கிடைக்கச் செய்வது போன்ற வேறுசில ஆக்கப்பூர்வமான பணிகளையும் செய்யவேண்டும்.

அதேசமயம், பொது நிறுவனங்களில் சமூகப் பன்முகத்தன்மை நிலவவேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்தவேண்டும். இன வேறுபாடுகளையும் பாலின சமத்துவமின்மையையும் குறைப்பதற்கு இத்தகைய முயற்சிகள் துணைபுரிந்திருக்கிறது. வழக்கறிஞர்சங்கம், தொழிற்சங்கம், அரசுசாராநிறுவனங்கள் போன்றவை வெறும் உயர்ஜாதிச் சங்கங்களாக இருக்கக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், ஜாதியப்படிநிலைச் சமூக அமைப்பைப் பாதுகாக்கும் காவலர்களாக மட்டுமே அவர்கள் இருக்கிறார்கள் என்று பொருள்.

உயர்ஜாதியில் பிறந்துவிட்டதனாலேயே நாம் ஒருவர்மீது குற்றம்சாட்டிவிட முடியாது. ஏனென்றால் எந்த ஜாதியில் பிறக்கவேண்டும் என்பது அவர் விரும்பித் தேர்ந்தெடுத்த ஒன்று அல்ல. ஆனால், சமத்துவத்திற்காக நடக்கின்ற போராட்டங்களுக்குத் தடையாக நிற்காமல், இந்த ஜாதிய அமைப்பை எதிர்க்கும் வேலையைப் பாதிப்புக்கு உள்ளாகும் பின்தங்கிய சமூகத்தினரிடம் விட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்ளாமல், இந்த ஜாதியச் சமூகஅமைப்பிற்கு எதிராகப் போராட வேண்டிய கூடுதல் பொறுப்பு உயர்ஜாதியினருக்கு இருக்கிறது. உயர்ஜாதியில் பிறந்ததனாலேயே அவர்கள் பெற்றிருக்கும் சலுகைகளாலும் வாய்ப்புகளாலும்தான் இந்தக் கூடுதல் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

- முற்றும்

- Ankita Aggarwal, Jean Dreze, Aashish Gupta - Economic & Political Weekly 07.02.2015

**அங்கிதா அகர்வால் - தேசிய கிராமப்புற வளர்ச்சி நிறுவனத்தில் ஆய்வு மாணவர்; ஜீன் டிரேஸ் - ராஞ்சி பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறையின் வருகைப் பேராசிரியர்; ஆஷிஷ் குப்தா - எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆய்வு நிறுவனத்தைச்சேர்ந்த ஆய்வாளர்.**

அரசூர் அ.ப.சிவா

# உலக சினிமாவும் உள்ளூர் சினிமாவும்

நமக்கு தெரிஞ்சதெல்லாம் வெள்ளிக்கிழமை ரிலீசாகிற தமிழ் சினிமா மட்டும் தான், பேரரசிலிருந்து ஆரம்பித்து ஹரி வரை பிரித்து மேய்ந்துவிடுவோம். அடிக்கடி கட்டுரைகளிலும் வலைத்தளங்களிலும் கேள்விப்படும் ஒரு வார்த்தை உலக சினிமா. அட என்னடா அது உலக சினிமா அப்பபடின்னு தேடிப்பார்த்தப்ப குழப்பமே மிஞ்சியது ஒவ்வொருத்தர் பார்வையிலும் உலக சினிமா வெவ்வேறு வடிவங்களில் இருந்தது ..




நம்ம பயலுக கிட்ட கேட்டா தமிழில் உலக சினிமா எடுக்க தகுதியுள்ள ஒரே ஆளு கமல காசன் தான் அப்படிங்கறாங்க .

அவுரு படம் தமிழ்நாட்டில் வெளியாகா மல் உலக முழுக்க வெளியானதாலும், படத்த ரிலீசு செய்ய முடியாமல் போனால் உலகத்த விட்டே அடச்சே நாட்ட விட்டு உலகத்துக்கு போறேன் அப்படின்னு சொன்ன தாலே.. பசங்க தப்பா புரிஞ்சுட்டாங்க .போலும் உத்தமா???

சிகரம், இமயம், மலை, குன்று அப்படின்னு பழம் தின்னு கொட்டை போட்டவர்கள் கையில் இருந்த தமிழ்சினிமா தன்நிறத்தை மாற்றியுள்ளது கடந்த 10 வருடங்களில் . மகேந்திரன்,பாலு மகேந்திரா, பாலா இவர்களைப் போன்ற இயக்குநர்களுக்கான கால இடைவெளியைக் குறைத்து சமகாலத்திலேயே திறமையான தெளிவான இயக்குநர்களைத் தந்துள்ளது

அவ்வகையில் பா.இரஞ்சித்,கார்த்திக் சுப்புராஜ்,நலன்குமாரசாமி,பாலாஜி தரணிதரன், நவீன் (பெயர் விடுபட்டிருக்கலாம்) ஆகியோர். இப்ப அந்த வரிசையில் மணிகண்டன் அவரின் காக்கா முட்டை மூலம் .

பி.ஜே.பி ஆட்சிக்கு வந்ததை தமிழ் சினிமா வை போல் வேறு யாரும் பிரதிபலிக்க வில்லை அத்தனை பேய் படங்கள், திரையரங்கு பக்கம் போன மாதம் பெய்த மழைக்கு கூட ஒதுங்க முடியாத நிலை, அந்நிலையை உடைத்திருக்கிறது இந்த காக்கா முட்டை .

உலகமயமான பெருநகரத்தின் நடுவில் உள்ள சேரியில் வசிக்கும் இரு சிறுவர்களின் உலகமே கதைக்களம். சின்ன காக்காமுட்டை, பெரிய காக்கா முட்டை. 10 , 8 வயது நிரம்பிய சிறுவர்கள், பாட்டி, அம்மாவுடன் வாழ்கிறார் கள். அப்பா சிறையில், வக்கீலுக்குக் காசு கொடுப்பதால் பள்ளிக்குச் செல்ல முடியாமல் ரயில் தண்டவாளத்தில் சிதறும் நிலக்கரியை எடுத்து சம்பாதிக்கும் சிறுவர்கள், பெரும் மரம் கொண்ட விளையாட்டு மைதானத்தில் புதிதாய் முளைத்த சிம்புவால் திறக்கப்படும் பிட்சா கடை, அதில் பிட்சா சாப்பிட அவர்கள் எடுக்கும் முயற்சியே காக்கா முட்டை ..

மிகைப்படுத்திக் காண்பிக்கப்படாத விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் சிறுவர்களின் வாழ்வியல். காட்சிகளினூடே இயல்பாகவும் அழுத்தமாகவும் சொல்லிச் சென்ற அவலங்கள் .. கார்ப்பரேட் கடை முதலாளி, ஊழல் அரசியல்வாதி, அண்டிப்பிழைக்கும் அல்லக்கைகள், அடியாள் வேலை செய்யும் காவல் துறை, டீவி பெட்டி கொடுத்து விட்டு அரிசி கொடுக்காத ரேசன் கடை.

படத்தைத் தயாரித்து உலக அளவில் அறியப்படும் வரை காத்திருந்து, தேசிய விருது வரை கொண்டு சென்று பொறுமையாக வெளியிட்ட நடிகர் தனுஸ், இயக்குநர் வெற்றிமாறன் ஆகியோர் பாராட்டு தலுக்குரியோர்.

சரி அதெல்லாம் இருக்கட்டும். தியேட்டர் போய் பார்த்துக்கிறோம். இந்த உலக சினிமான்னா என்ன? உனக்கு தெரியுமா? தெரியாதா? மலர் மாமா மிரட்ட.....

எந்த சினிமா அது எடுக்கப்படுகிற மக்களின் வாழ்வியலை அடர்த்தியாகவும், சமசரமின்றியும், இயல்பாகவும் பதிவு செய்கிறதோ அது உலக சினிமா அவ்வகையில் காக்கா முட்டை உலக சினிமாவே .

காக்கா முட்டை பாட்டி சுட்ட தோசை மாதிரி,ஒலகநாயகன், உச்ச நட்சத்திரங்கள் படங் கள் பீட்சா மாதிரி நூல், நூலா வரும். ஏனென்றால் கெட்டுப் போனதுதான் நூல் நூலா வரும் .

# காட்டாறு வளர்ச்சி நிதி

பொள்ளாச்சி சி.விசயராகவன்

"சுயநலத்தையே பிரதானமாய்க் கருதி, கற்பித்துக்கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை."

-கலகக்காரத்தோழர் பெரியார், 24.11.1940- குடிஅரசு

*'காட்டாறு' வாசகர் குடும்பத்தின் தோழர்களில் ஒருவனாகிய பொள்ளாச்சி விசயராகவன் எழுதும் தோழமை மடல்...வணக்கம்!*

*'காட்டாறு' 8 இதழ்கள் முடிந்து ஒன்பதாவது இதழில் இந்த வேண்டுகோள் கடிதம் உங்கள் கரங்களில்... கலகக்காரத் தோழர் பெரியார் காணவிரும்பிய திராவிடர் சமுதாயத்தைத் திருத்தி உலகில் ஏனைய சமுதாய மக்களைப் போல மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக மாற்ற அவருக்குத் துணையாக எண்ணற்ற அச்சு ஊடக இதழ்கள் அவருடன் பணிபுரிந்து வந்தன. காலச்சுழற்சியில் பல இதழ்கள் தொடர்ந்து நடத்த இயலாமல் நின்று போயின. இதழ்கள் நடத்துவது என்பது சாதரணமான செய்தி அல்ல.*

*அது கலகக்காரத் தோழர் பெரியார் கூறியது போல இமயமலை வெயிலில் காயமால் இருக்க குடைபிடிப்பது போன்றது...! செங்குந்தான பாறையின்மீது முதுகில் இரும்புக்குண்டைச் சுமந்து உச்சிக்குப் பயணப்படுவது போல் என்றார். அவ்வளவு கடினமான பணியாகும் இதழ் நடத்துவது என்பது.!*

*'காட்டாறு' கொள்கைப் பிடிப்புள்ள சில தோழர்களின் தன்னலமறுப்புப் பணியாக, இந்தக் கொள்கைப் பணியை எந்தவிதமான எதிர்பார்ப்பு இன்றியும், மாதம் ரூபாய் 10,000 வாடகை வருமானம் தரத்தக்க கட்டிடத்தை இலவசமாகவும் கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்றாலும் தொடர்ந்து இதழை நடத்த மேலும் இதழை வளர்த்தெடுக்க இந்த உதவிகள் மட்டும் போதாது.!*

*'காட்டாறு'வின் நோக்கமான* 'புதியவர்களை எழுதவைப்பது, அந்த புதியவர்களை அமைப்பாக்குவது' *என்ற செயல் இலக்கை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்?*

'காட்டாறு' குடும்ப உறுப்பினர்களே! தோழர்களே! கீழ்காணும் வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த தோள் கொடுங்கள்.

'காட்டாறு' ஆண்டுக்கட்டணச் சேர்ப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திய தோழர்களே! ஆண்டுக் கட்டணம் செலுத்திய 1000 பேரில் ஒரு 300 பேரை தேர்ந்தெடுத்து மாதம் ரூ.100 நன்கொடையாக பெற முயற்சி செய்யுங்கள்.

அரசு மற்றும் தனியார் நடத்தும் நூலகங்கள் மற்றும் தேநீர்க் கடைகள், முடிதிருத்தும் நிலையங்கள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் தோழர்களின் கூட்டு முயற்சியில் காட்டாறு இதழுக்கு ஆண்டுக் கட்டணம் செலுத்தி இதழை விரிவாகக் கொண்டுசெல்லாம்.

வணிகநிறுவனங்களை அணுகி விளம்பரங்கள் சேர்ப்பதன் மூலம் காட்டாறுவின் நிதிநிலையை மேம்படுத்தலாம்.

தோழர்களின் உறவினர்கள், நண்பர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற நிகழ்வுகளில் அன்பளிப்பாகக் காட்டாறு இதழுக்கு ஆண்டுக்கட்டணம் செலுத்துவது, அந்த நிகழ்வுகளின் நினைவாக உரியவர்களிடம் நன்கொடை பெறுவது, இன்னமும் இதுபோன்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் காட்டாறு அதிகப் பக்கங்களுடன், கொள்கை வலிவுடன் தற்போதைய விலையை விட சற்றுக்குறைவாக வாசகர்களுக்குத் தரலாம் இதழ்களின் எண்ணிக்கையையும் கூட்டலாம்.

கொள்கைத் தோழர்களே! விரைந்து தேனீக்களைப் போலப்பணியாற்றி கலகக்காரத் தோழர் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை வென்றெடுக்க காட்டாறுவின் வேகத்தை அதிகரிக்க உழைப்போம் வாருங்கள்.

"பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்க!
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுவதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?
ஏற்ற செயல் செய்தற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?"-

*சுயமரியாதைக் கவிஞர் பாரதிதாசன்.*

நன்றி! வணக்கம் !!





# யோகா

# நமக்குத் தேவையா?

மருத்துவர் ஸ்ரீனிவாஸ் கக்கிலயா,M.D.,

( ஸ்ரீனிவாஸ்கக்கிலயா மங்களூரில் ஓர் முன்னணி மருத்துவ ஆலோசகராவார். பல வெளிநாடுகளுக்குச் சென்று பல ஆய்வு மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். சர்வதேச அளவில் பல ஆய்வறிக்கைகளை வெளியிட்டுள்ளார். தானே "Online Journal of Health and Allied Sciences" (www.ojhas.org) என்ற ஆய்விதழை நடத்தியும் வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.)

யோகா. எண்ணிலடங்காத வடிவங்களில், எல்லா இடங்களிலும் உள்ளது. செய்தித்தாள்களில் உடல்நலம் சார்ந்த கட்டுரைகளிலிருந்து தொலைக்காட்சி சேனல்கள் வரை, இந்தியாவிலிருந்து அமெரிக்கா வரை, குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை யோகா பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மனித இனத்திற்கு இந்தியாவின் மகத்தான பங்களிப்பு யோகாதான், என முத்திரை குத்தப்படுகிறது.

யோகா பலருக்கு பெரிய வணிக வாய்ப்புகளைக் (*Business opportunities*) கூட வழங்கியுள்ளது. சிலர் 'காப்புரிமை'யோடு நிறுவன பாணியில், பிரத்யேகமாக பல யோகா பள்ளிகளைத் திறந்து வந்தனர். சிலர் பாபா, ஸ்ரீஸ்ரீ போன்ற அடைமொழிகளை வைத்துக் கொண்டு, யோகாவின் ஓரிரண்டு முறைகளைத் திருடி பெயர் மாற்றம் செய்து, தன்னை 'ஜகத்குரு' வாக உருமாற்றிக் கொண்டனர் . அது மட்டுமல்ல, இந்திய அரசு பல மாநிலங்களில் முதலாம் வகுப்பிலிருந்தே உடற்பயிற்சியில் யோகாவை கட்டாயப் பாடத்திட்டமாக சேர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தது.

பழங்கால இந்தியர்களுடையது என்று எதைக் கூறியேனும் விளம்பரம் தேடிக் கொள்ளும் இந்துத்துவா கும்பல், யோகாவை தங்களுக்கானதாக வைத்துக் கொண்டனர். அதனால் யோகாவைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதில் முன்னணியில் உள்ளனர். அதனால் தான் யோகாவைப் பற்றி எதேனும் சந்தேகங்களை எழுப்பினால் அதனை ஆர்.எஸ்.எஸ்-க்கும், பா.ஜ.க.-விற்கும், இந்து மதத்திற்கும் எதிரானதென்றும், சில நேரங்களில் தேசவிரோதமானதென்று கூட முத்திரைக் குத்தும் போக்கு நிலவுகிறது. ஆனால், யோகா பயிற்சி அவசியமானதா? நன்மையளிக்கக் கூடியதா?? பாதுகாப்பானதா??? பார்ப்போம்.

**யோகா என்றால் என்ன?**

யோகா பயிற்சி பண்டைய இந்தியாவில், குறிப்பாக நீண்ட நேரம் தியானங்கள் செய்து மிகவும் கண்டிப்பான வாழ்க்கையை வாழும் முனிவர்கள் மத்தியில் மிக அதிகளவில் புழக்கத்தில் இருந்தது. கி.மு 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'பதஞ்சலி' என்ற முனிவர் தான் இவற்றை யோகா சூத்திரங்களாக நெறிமுறைப்படுத்தினார். அதன் பின், 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமி கோரக்நாத்தின் சீடரான முனிவர் 'யோகி ஸ்வத்மாரம', எழுதிய 'ஹத யோகா ப்ரதிபிகா' என்ற 'ஹத யோகா' பற்றிய தலைசிறந்த கையெழுத்துப் பிரதிக்குப் பின், யோகா பயிற்சி குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சியடைந்தது.

பதஞ்சலி உருவாக்கியது 'ராஜ யோகா'. ஹத யோகா ப்ரதிபிகாவில் ராஜயோகாவின் உச்சத்தை அடைவதற்கான படிக்கட்டுகளாகவே ஹத யோகாவை அறிமுகப்படுத்தினார் யோகி ஸ்வத்மாரம. எனவே அது தியானத்தின் உயர்நிலையை

அடைவதற்கும், உடலை ஆரோக்கியமானதாக வைத்துக் கொள்ளவும், உடலைத் தூய்மைப் படுத்தவும் ஓர் ஆயத்த நிலையாகும். நவீன காலத்தில், பதஞ்சலியின் ராஜயோகாவோடு சேர்த்து, எண்ணிலடங்கா பள்ளிகளும், யோகா மற்றும் தியானத்தில் பல்வேறு வடிவங்களும் உள்ளன.

பண்டைய இந்தியாவில் நடைமுறையில் இருந்த யோகாவிற்கும் இன்று பலவடிவங்களில் காணப்படும் யோகாவிற்கும் இடையே பொதுவான அம்சம் ஏதேனும் உண்டா? அவை அனைத்தும் யோகா தானா? உண்மையிலேயே யோகா உடல்நலத்திற்கு நன்மை பயக்கும் என்று தெளிவான சான்றுகள் உண்டா?

சுகாதாரம் மற்றும் நோய் மீதான யோகாவின் விளைவுகளைப் பற்றி நிறைய ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆய்வுகள் இந்தியாவிலுள்ள பல்வேறு யோகா நிறுவனங்களிலும், சில இந்தியாவின் தலைசிறந்த நிறுவனங்களான தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல்கழகத்திலும் (AIIMS), பெங்களூரு மற்றும் வெளிநாடுகளிலுள்ள தேசிய மனநல மற்றும் நரம்பியல்கழகத்திலும் (National Institute of Mental Health and Neuro Sciences: NIMHANS) மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆய்வு முடிவுகள் தேசிய ஆய்விதழ்களிலும், சில சர்வதேச ஆய்விதழ்களிலும், அதிலும் குறிப்பாக மாற்று மருத்துவத்திற்கான (Alternative Medical Practice) ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த ஆய்வுகள் அனைத்தும் எந்த தரமான யோகா முறையையும் எடுத்துக் கொள்ளாமல், அதன் பாதகமான விளைவுகளைப் பற்றிக் கூறாமல், தரமான ஆய்வுமுறைகளைக் கையாளாமல், சிறிய, குறுகிய கால, கட்டுப்பாடற்ற, ஒரு தலைபட்சமான ஆய்வுகளாகவே உள்ளன.

Agency for Healthcare Research and Quality U.S. Department of Health and Human மற்றும் University of Alberta Evidence-based Practice Center Edmonton, Alberta, Canada ஆகிய அமைப்புகள் இணைந்து மரியா பி ஆஸ்பினோ என்ற ஆராய்ச்சியாளர் தலைமையில் 10 ஆராய்ச்சியாளர்கள் கொண்ட குழு கடந்த 2007 ஆம் ஆண்டு Meditation Practices for Health: State of the Research என்ற தலைப்பில் யோகாவின் விளைவுகளைப் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. அதன் முடிவுகளாவன:-

சுவாசம், இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவை மீதும், நீரிழிவு நோய், உயர் இரத்தஅழுத்தம், உடல் பருமன்,லிப்பிட் சீர்குலைவுகள் (Lipid Disorders), புற்றுநோய், இளைப்பு நோய், வலிப்பு நோய், கவலை, மனஅழுத்தம், மனநலக் கோளாறு (Obsessive Compulsive Disorder), கவனிப்பு பற்றாக்குறை (Attention Deficit Disorder), உண்ணுதல் குறைபாடுகள் (Eating Disorders), குடல் நோய்கள், கணைய வீக்கம் (Pancreatitis), கர்ப்பம், மாதவிடாய் முடிவடைதல் (Menopause), போதை பழக்கம், கீல்வாதம் (Osteo arthritis), குறுக்கு வலி (Low Back Pain), தைராய்டு நோய், பக்கவாதம், திசுவின் ஒரு சில பகுதிகள் இறுகிப் போதல் (Multiple Sclerosis), மணிக்கட்டு வலி (Carpal Tunnel Syndrome), சிறுநீரகநோய் (Urological Disease), ஒற்றை தலைவலி (Migraine), காசநோய் (Tuberculosis), யானைக்கால் நோய் (Filariasis) போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் யோகா செய்வதால் உண்டாகும் விளைவுகளைப் பற்றி பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுகளின் போது யோகாவின் பல வகைகளான அஷ்டங்க யோகா, சஹஜ யோகா, ஹத யோகா, குண்டலினி யோகா, அய்யங்கார் யோகா, சில்வர் யோகா, ரெஸ்டொரேடிவ் யோகா, சித்த சமதி யோகா, சுதர்ஷன க்ரியா, இண்டெக்ரேடட் யோகா போன்றவையும், பிராணயமம் போன்ற பயிற்சிகளும் , சவாசனம், சிரசாசனம் போன்ற ஆசனங்களும் கபாலபதி, குஞ்சல் க்ரியா, அனுலோமா விலோமா, முக் பஸ்த்ரிகா, மந்திரத்தின்தியானமுறைகள், ஆழ்நிலை தியானம் (Transcendental Meditation) மற்றும் விபாசனா போன்றவையும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு ஆய்வறிக்கையைப் பற்றியும் விவரமாகக் காண முடியாதென்பதால், அவற்றின் முடிவுகளை மட்டும் இப்போது காண்போம்.

மரியா பி ஆஸ்பினோ, தியான முறைகளின் அய்ந்து பிரிவுகளான மந்த்ரா தியானம், மைண்ட்ஃபுல்னஸ் தியானம், யோகா, டாய்ச்சி, மற்றும் குய்காங் பற்றிய ஆய்வுகளின் முடிவுகளைத் தொகுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார். தியான முறைகள் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப் படுவதைப் பற்றி, 1956 - விருந்து 2005 வரை 813 ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் மரியா எடுத்துக் கொண்டார். அவற்றில் 67% 'Intervention Studies' அதாவது, பங்கேற்பாளர் களை சில சிகிச்சைகளுக்கு உட்படுத்தி அதன் தாக்கத்தை அளவிடும் ஆய்வுகள்.

மீதமுள்ள 33% கண்காணிப்புப் பகுப்பாய்வு ஆய்வுகள் (Observational Analytical Studies). இவற்றில், அறுபத்தைந்து ஆய்வுகள் உயர்இரத்த

அழுத்தம் மற்றும் பிற இதய நோய்களை தியானத்தின் மூலம் குணமடையச் செய்ய முடியுமா? என்பதைச் சோதிக்கும் ஆய்வுகளாகும். முடிவாகப் பார்த்தோமேயானால், ஆய்வின் வடிவமைப்பு எப்படி இருந்தாலும், தியானத்தைப் பற்றிய ஆராய்ச்சி முறையியல் மிகவும் மோசமானதாகவே உள்ளது. பெரும்பாலான கண்காணிப்புப் பகுப்பாய்வு ஆய்வுகள், ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மக்கள் தொகையின் நிச்சயமற்ற தன்மையாலும், விளைவுகளை உறுதியாகக் கண்டறிய போதிய முறைகள் இல்லாத காரணத்தாலும் ஒருதலைபட்சமாகவே உள்ளன.

சுகாதாரக் கல்வியோடு ஒப்பிடும் போது ஆழ்நிலை தியானத்தால் உயர் இரத்த அழுத்தநோயாளிகளுக்கு ஒரு நன்மையும் இல்லை என ஆய்வறிஞர்கள் கண்டறிந் துள்ளனர்.

மருத்துவ அல்லது புள்ளியியல் ரீதியாக, எந்தவொரு சிகிச்சையையும் எடுக்காமலிருக்கும் இரத்த அழுத்த நோயாளிகளோடு ஒப்பிடும் போது யோகா இரத்த அழுத்த நோயாளிகள் மீது எந்தவொரு குறிப்பிடத்தக்க விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. இதயக்கோளாறுகள் கொண்ட நோயாளிகளுக்கு உடல் எடையைக் குறைக்க யோகாவை விட உடற்பயிற்சியே மிகவும் சிறந்தது. ஆய்வறிஞர்கள், பெருமளவில், ஆரோக்கியமான பங்கேற்பாளர்களைக் கொண்டு தியானத்தால் ஏற்படும் உடலியல் மற்றும் நரம்பியல் விளைவுகளைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட 311 ஆய்வுகளை ஆராய்ந்துள்ளனர்.

தியானப் பயிற்சிகளின் குணமடையச் செய்யும் திறன் குறித்த ஆய்வுகள் அனைத்தும் நிச்சயமற்றதாகவும், இடருக்குள்ளாக்குவதாவும் உள்ளன என்று மாயாவும் சக ஆய்வறிஞர்களும் கூறுகின்றனர். எனவே இப்போதிருக்கும் ஆதாரங்களை வைத்து, தியானப் பயிற்சிகளின் சுகாதார விளைவுகள் குறித்த தெளிவான முடிக்கு வர இயலாது என்கின்றனர். மேலும், தியானப் பயிற்சிகள் குறித்த எதிர்கால ஆய்வுகளின் வடிவமைப்பு, செயல்படுத்துதல், பகுப்பாய்வு, மற்றும் முடிவுகளை அறிக்கையாக வெளியிடுதல் ஆகியவை மிகக்கடுமையாகவே இருக்கும் என்கின்றனர்.

அது போலவே, யோகா மன அழுத்தத்தை சரி செய்யும் என்பதற்கும், அதிலுள்ள மூச்சுப் பயிற்சிகள் இளைப்பு நோயை நீக்கும் என்பதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை.குழந்தைகள் யோகா பயிற்சிகளைச் செய்வதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத்தும் தரக் குறைவாகவே உள்ளன.

**யோகா பாதுகாப்பானதா?**

யோகா பயிற்சி சாதாரண தலை வலியிலிருந்து கடுமையான, சரிசெய்ய முடியாத நரம்பியல் சேதாரங்கள் வரை பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்று பல ஆய்வறிக்கைகள் எச்சரிக்கின்றன.

அமெரிக்கநுகர்வோர் தயாரிப்பு பாதுகாப்பு ஆணையத்தின் (The Consumer Product Safety Commission of the US) அறிக்கையின் படி, அமெரிக்காவில் மூன்று ஆண்டுகளில், யோகா செய்ததால் ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவ ஆலோசனை அல்லது அவசர சிகிச்சை அளிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 13,000 ஆகும்! இதில் யோகா ஆசிரியர்களும் அடக்கம்.

**யோகாவால் ஏற்பட்ட பல பாதிப்புகளில் சில:-**

1. எலும்புகள், தசைகள், சவ்வு, தசைநாண்கள், தசைநார்கள், மூட்டுகள் மற்றும் தசைகளையும் உறுப்புகளையும் ஒன்றாகப் பிணைக்கும் இணைப்பு திசுக்கள் ஆகியவற்றாலானது மஸ்குலோ ஸ்கெலிட்டல் அமைப்பு. அவ்வமைப்பில் ஏற்படும் காயங்கள் (Musculoskeletal Injuries)

2. எலும்பு முறிவுகள் (Fractures)

3. பக்கவாதம் (Stroke)

4. முதுகெலும்பில் ஏற்படும் காயங்கள் (Spinal Cord Injuries)

5. ஃபுட் டிராப் (Foot Drop, பாதத்தின் முன் பகுதியை அசைக்க முடியாதவாறு ஏற்படும் பலவீனம் அல்லது வாதம்)

6. நுரையீரல் தொடர்பான நோய் (Pneumothorax)

7. நுரையீரலிலுள்ள காற்றுப்பைகளைச் சேதப்படுத்திப் படிப்படியாக நாம் சுவாசிப்பதில் சிரமத்தை ஏற்படுத்தும் 'Emphysema'

8. பல் அரிப்பு (Dental Erosion)

9. விழியிலுள்ள திரவ அழுத்தத்தை அதிகரித்து, கண்ணிலுள்ள நரம்பில் (Optic Nerve) சேதத்தை ஏற்படுத்தும், 'Increased Intraocular Pressure and Glaucoma'

கழுத்து, இடுப்பு, முதுகு, பின் தொடை மற்றும் முழங்காலில் ஏற்படும் தசை பிடிப்புகள், பொதுவாக அனைத்து யோகா வகுப்புகளிலும் காணப்படுகின்றன.

சில யோகாசனங்கள் தோள்கள், முழங்கைகள் மற்றும் மணிகட்டுப் பகுதிகளில் அதிகமான அழுத்தத்தை ஏற்படுத்தும். அவற்றை அதிகளவில் செய்தால், தோள்பட்டை அல்லது முழங்கை போன்ற மூட்டுகளைச் சுற்றி வீக்கத்தையும், (*Bursitis*) சில நேரங்களில் மணிக்கட்டிலுள்ள மீடியன் நரம்பின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் '*Carpal Tunnel Syndrome*' வருவதற்கும் வழி வகுக்கும்.

குடலிறக்கம் (*Herniation*), எலும்பு முறிவுகள் ( *Fractures* ) போன்றவை யோகா செய்வதால் ஏற்படும் சில கடுமையான பாதிப்புகளாகும்.

அஷ்டங்க வின்யாஸ யோகா செய்யும் 110 நபர்களில் 107 பேருக்கு, முன்பே குறிப்பிட்டது போல் மஸ்குலோ ஸ்கெலிட்டல் அமைப்பில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. 62% யோகா செய்பவர்களுக்கு ஏதேனும் ஓர் பாதிப்பாவது ஏற்பட்டிருக்கிறது. சிலருக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன!

முனைவர் விஜய் பி சர்மா, அவர்களின் கூற்றுப்படி, பயிற்சியாளர்கள் நிலையான கவனத்தோடும், பொறுமையோடும், ஒழுக்கத்தோடும் மெதுவான மூச்சுப் பயிற்சிகளான ப்ஹ்ரமரி, ஷிதலி, சிட்காரி அல்லது நாடி ஷோதனா போன்றவற்றைச் செய்தால் குறைவான சுகாதார ஆபத்துகள் தான் வரும். ஆனால் ரவிஷங்கர் மற்றும் ராம்தேவ் பிரச்சாரம் செய்யும், அதிவேகமாக செய்யப்படும் மூச்சுப் பயிற்சிகளான கபாலபதி மற்றும் பஷ்த்ரிகா அதிகமான சுகாதார ஆபத்துகளை ஏற்படுத்தும். சிலர் எவ்வித எச்சரிக்கையுமின்றி மிக வேகமாக சுவாசிப்பதால், ஹைபர்வெண்டிலேஷனால் (*Hyperventilation*) கூட பாதிக்கப்படலாம்.

அதிவேக பிராணயாம பயிற்சிகள் மிகுந்த வலியையும், அசவுகரியத்தையும் ஏற்படுத்தும். எனவே, நுரையீரல் நோயுடையோர், கர்ப்பிணிகள், சமீபத்தில் தலை, கழுத்து, மற்றும் தண்டு போன்ற உறுப்புகளில் அறுவைச்சிகிச்சை செய்து இன்னும் குணமாகாமலிருப்போர், அதிக அல்லது குறைவான இரத்தஅழுத்தம், நீரிழிவுநோய், சிறுநீரகநோய், வலிப்புநோய், காது, மூக்கு, அல்லது கண் சம்பந்தப்பட்ட நோய்கள், நாள்பட்ட தலைவலி, ஒற்றைத் தலைவலி உடையோர் அம்மூச்சுப்பயிற்சிகளைச் செய்யவே கூடாது என்கிறார் விஜய். பி.சர்மா. (இதில் எந்த நோயும் விடுபடவில்லையன்றோ?!)

மரியன் கார்ஃபின்கல் கூற்றுபடி, ஆசனங்களைத் தவறுதலாகச் செய்வது அபாயகரமானது. மேலும், எந்த சிகிச்சைக்காக யோகா மய்யங்களுக்குச் சென்றோமோ, அந்த நிலையை யோகா இன்னும் மோசமானதாக மாற்றிவிடும் அபாயமும் உண்டு. எனவே, சிகிச்சைக்காக யோகாவைச் செய்வதென்பது மிகவும் மோசமானது. மேலும், பொருத்தமற்ற கூற்றுகளுடன், மிகைப்படுத்திக் காண்பிக்கப்படும், யோகாவைப் பற்றிய மேற்கத்திய விளக்கவுரைகளை மிக எச்சரிக்கையாக அணுக வேண்டும் என்கிறார் மரியன்.

**யோகா தேவை தானா?**

மேற்கண்ட அனைத்து கூற்றுகளையும் வைத்துப் பார்த்தோமேயானால், தியானம் செய்து கடுமையான வாழ்க்கை நடத்திய பண்டைய இந்திய யோகிகள் மற்றும் முனிவர்களால் யோகா உருவாக்கப்பட்டது. இன்றைய நாளில், சாமானிய மக்களுக்கு அப்பயிற்சிகளின் தேவை என்ன? என்பது தெளிவாகப் புலப்படவில்லை.

இன்றும், பண்டைய இந்திய யோகா பயிற்சியின் நன்மைகளை அளிப்பதாகக் கூறிக் கொண்டு, பல யோகா பள்ளிகள் உள்ளன. அவற்றில் பல, பதஞ்சலியின் யோகா சூத்திரங்கள் மற்றும் 'ஹத யோகா ப்ரதிபிகா'வில் குறிப்பிடப்பட்டுள்ள யோகா பயிற்சிகளை எளிமையாக்கி, மாற்றியமைத்து பெயர் மாற்றம் செய்துவிட்டனர். அந்த மாற்றங்கள் எதற்காக செய்யப்பட்ட தென்பதற்கு தெளிவான விளக்கங்கள் இல்லை. மேலும், அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட பயிற்சிகள் பழங்காலப் பயிற்சிகளைப் போல் நன்மை பயக்குமா? என்பதற்கும் பதிலில்லை.

யோகா அனைத்து நோய்களுக்கும், அனைத்து வயதினருக்கும் நன்மை பயக்குமென் பதற்கும், முற்றிலும் பாதுகாப்பான தென்பதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை. இளம் குழந்தைகளுக்கு யோகா பாதுகாப்பானதா? என்பது குறித்து எந்தத் தகவல்களும் இல்லை. யோகா செய்யும் குழந்தைகளுக்கு இருதய நோய், இளைப்பு நோய், மூட்டுகளில் குறிப்பாக தண்டுவடத்தில் உருக்குலைவுகள் போன்ற ஆபத்துகள் ஏற்படலாம்.

எனவே, முதல் வகுப்பிலிருந்து அனைத்து மாணவர்களுக்கும் உடற்கல்வி ஆசிரியர்கள் கட்டாயமாக யோகா பயிற்சி அளிக்க வேண்டும் என்று பல மாநிலங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட மத்திய அரசின் திட்டம் எந்த சூழ்நிலையிலும் வரவேற்கத்தக்கதல்ல!!

தமிழில்-யாழ்மொழி

நன்றி-*www.nirmukta.com*

18 plus

# காமமும் ஆணாதிக்கமும்



படிக்க வேண்டாம்

## சிறுசுகளும் 18 கலாச்சார காவலர்களும் அரைகுறைகளும்

**'காமம்'**

அப்படினா என்ன ?? அட அவ்ளோ மோசமான விசயமா ?? அட அவ்ளோ கேவலமான விசயமா ?? அட அவ்ளோ கூச்சமான விசயமா ?? ம்ம்... நம்ம மம்மி டேடி காமம் பன்லனா நாம எப்படி வந்திருப்போம் ??

காமம்.. நாம பொறக்கனும்ன்றதுகாகவே பண்ணாங்களா ??

அய்யோ....அவங்க ஜாலியா இருக்க பன்னாங்க பா ...

ஆமா ... காமம் ன்றது பிள்ளை பெத்துக்குற விசயம் மட்டும் இல்ல.. காமம் உணர்வு வரும்போது தான் .. இந்த மனிஷங்க உடம்புல சில ஹார்மோன்ஸ் சுரக்குது ..

சரி ஹார்மோன்ஸ் னா என்னாணா..

ஆண்களுக்கு ஏன்ட்ரோஜென் என்கிற ஹார்மோன்களும் , பெண்களுக்கு ப்ரஜஸ்ட்ரோஜென் என்கிற ஹார்மோன்களும் சுரக்குது ..

அதாவது ... ஆண்களுடைய ஹார்மோன்கள் கொன்ச நேரத்துக்கு தான் சுரக்கும்.. இது சுரக்குறப்போ ஆண்களுக்கு படபடப்பு , துடிப்பு , வேகம் வரும்.. இது சுரக்குறப்போ ஆணுருப்பு பெருசாகி ... உராய்வுக்கு ஆண்கள் மனது தூண்டும் .. விந்து வெளிய வந்த உடனே அந்த ஹார்மோன் அடங்கிடும் ..அவ்ளோ தாங்க ... ஒரு 10 ,15 நிமிசம் தான் தாங்கும் !!!

சரி ப்ரொஜஸ்ட்ரோஜன் என்ன பன்னுது ??

அட இதுவும் துடிப்பு , படபடப்பு கூடவே அதிக இதமும் உண்டு பண்ணுதுங்க.. இது பெண்ணுக்கு உச்சகட்ட சுகம் அடையிற வரைக்கும் சுரக்குது ...திரும்பவும் கூட சுரக்குது ... இன்னும் அதிக நேரம் சுரக்குது... கிட்ட தட்ட 30 , 40 நிமிஷம் வர சுரக்குது னா பாத்துக்கோங்க ...

அட இது லாம் நாம ஏன் பேசுறோம் ...

விசயம் இருக்கே !!!

பலர் என்னிடம் பேசி , அல்ல உபதேசித்துள்ளனர் ...

பெண்ணடிமைத்தனத்தை அழிக்க அதன் ஆரம்பத்தை கண்டறிய வேண்டுமென ..ஆரம்பப் புள்ளியை அழித்தால்தான் பெண்ணடிமைத்தனத்தை அழிக்க முடியும் என ....அவர்களே சொன்னார்கள் .. சமூகம் தாய்வழிச் சமூகமா இருந்தது .. அப்போ பொதுவுடைமை இருந்தது. தனியுடைமை ஆனபின் தந்தை வழிச் சமூகம் ஆனது என...

எனது ஆய்வுக்கு.. சில தத்துவப் புத்தகங்களையும், வரலாற்றுச் சுவடுகளையும் , மிக அதிகமாக உளவியல் உண்மைகளையும் எடுத்துக்கொண்டேன் ... அதன் புரிதலின் பேரிலேயே வருவதை கூறுகிறேன் !!!

சமூகம் தாய்வழிச் சமூகமாக இருந்தது தான் !!! அதற்கு ஆதாரமாகப் பல கல்வெட்டுகள் உள்ளன.. அது எப்படி தந்தைவழிச் சமூகம் ஆனது.. பெண்ணடிமைத்தனம் வந்தது என்றால் .. முழுக்க முழுக்க இந்த ஆணாதிக்கம் காமத்திலிருந்து ஆரம்பித்ததே... கட்டற்ற பாலுறவு தன்மையுனிருந்த சமூகம் ... ஒரு ஆணுக்கு பல பெண்கள் என மாறியது !!!

அது எப்படி ??

இருவரும் பலதார உறவில் இருந்தனர்.. ஒவ்வொரு முறையும் ஆணும் பெண்ணும் காமம் செய்யும்போது .. ஆணுக்கு மட்டும் அவனுடைய திருப்தி 5 , 10 நிமிடத்தில் முடிந்தது.. ஆனால் பெண்ணுக்கோ .. அவனுடைய 5 ,10 நிமிட சேர்க்கை திருப்தி அளிக்கவில்லை .. அவளுக்கு 30 ,40 நிமிடங்கள் அவனின் தேவை உள்ளது ...அவன் தன்னை திருப்தி படுத்தாமல் போவதன் விளைவாய் ... இவள் அவனை விட அதிக ஆண்களுடன் உறவு வைத்துக்கொள்கிறாள் ...

தன்னை விட அதிக பேருடன் பெண் என்பவள் உறவு வைக்க நினைக்கிறாள் ... இவள் எனக்கு மட்டுமே சொந்தம் ... என்கிற உணர்வு உண்டாகிறது !!! இவளை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற நினைப்பில் ... பெண் என்பவள் ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்டால் அவனுடன் தான் வாழ வேண்டும் என சட்டம் விதிக்குறான் ...

உளவியல்படி ஆணுக்கு எந்தப் பெண்ணுடன் காமம் கொண்டாலும் ஒரே மாதிரியான திருப்தியே கிடைக்கும்!! ஆனால் பெண்ணுக்கு அப்படி இல்லை ... அது காமம் வைத்துக் கொள்ளும் ஆட்களை வைத்து வேறுபடும்!!! அதனால் ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கே பல பேருடன் உறவு கொள்ள வேண்டும் எனத் தோன்றுகிறது !!!

அவள் அப்படி வைத்துக்கொள்ளும் போது... இவன் இயலாமையை மறைத்து பேச.. ஒருவருக்கு ஒருவர் என்கிற முறையைக் கொண்டு வருகிறான்!!! அந்த முறையில் ஆணால் தாக்கு பிடிக்க முடிகிறது. ஆனால் பெண்ணால் முடியவில்லை!!! காரணம் உணர்வுகளை கட்டுப் படுத்தவே முடியாது!!! அப்போது தான் இவன் பெண்கள் என்றாலே ஒழுக்கமற்றவள் என்கிற பதத்தை, தன் ஆண்இயலாமை பதத்தோடு ஒப்புமைப்படுத்தி பெண்ணைக் கேவலப் படுத்துகிறான்.

ஆளுக்கான உணர்வுகளும் பெண்ணுக் கான உணர்வுகளும் வேறு!!! ஆனால் இவனோ... பெண் வரம்பை மீறுபவள் என்கிறான் .. இப்படித் தொடர... ஒருவருக்கு ஒருவர் என்கிற முறை அழிந்து... ஆணாதிக்கத்தால் ஒருவனுக்குப் பலர் என்கிற முறை உருவாகிறது !!! இப்படித் தான் ஆணாதிக்கம் தொடர்ந்தது ...

அந்தக்குடும்பத்தில் உள்ள ஒரு பெண் , பெண் குழந்தை பெற்றால்... அதை மற்ற ஆண்களுக்கு விற்றான்... இதுவே திருமண முறையின் அடுத்த பரிணாமம்!!! பெண்களுக்கு கட்டற்ற பாலியல் தன்மை இயற்கையானது என்பதால் ... அவளும் கட்டுப்பாடுகளை உடைக்க முயல்கிறாள் !!!

அப்போது தான் அவளைச் சங்கிலிகளால் கட்டி போடுகிறான்!! இது ஆபரணங்களின் இரண்டாம் பரிணாமம்... இன்னும் சில கூட்டங்கள்.. பெண்களை கட்டுப்படுத்த... பெண் வயதுக்கு வந்த உடன் அவளின் பிறப்புறுப்பில் கத்தியை விட்டு பெண்ணுக்கு காம உணர்வு தரும் நரம்பைக் கத்தரித்தனர்!!! இன்றும் இது சூடான், நைஜீரியா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் கட்டாய வழக்கமாக நடக்கிறது !!

அந்தப் பெண்களுக்கு காம உணர்வு என்றால் என்னவென்றே தெரியாது!!! இப்படியே பெண் மேல் ஒட்டுமொத்த ஆதிக்கத்தையும் செலுத்தியே வந்தது... இப்படியே... பெண்ணை வயதுக்கு வருவதற்கு முன்பே வன்புணர்வும் செய்து வந்தனர்!!! வன்புணர்தல் என்பது இந்த ஆண் டி.என்.ஏ வில் இன்றும் ஒவ்வொரு ஆணின் செல்களிலும் பதிந்து தொடர்ந்தே வருகிறது!!! இவ்வாறே சதி , புர்கா , தேவதாசி முறைகளும் மிக பக்கத்தில் தோன்றியவை !!!

மதங்கள் வருவதற்கு முன்பே மனித சமூகம் ஆணாதிக்கத்தோடே வந்தவை... மதங்களின் தோற்றத்திற்கு பின்பும் அப்படியே தொடர்ந்தது இன்றும் நாம் காணலாம்... காமம் என்பது இங்கு எங்கும் அதிகமாய் பெண்ணின் திருப்திக்காக நடப்பதில்லை... காமம் செய்யும் ஆண், பெண் திருப்தி அடைகிறாளா ..என நினைப்பதுமில்லை... இப்படியே பெண்ணின் தேவை திருப்தி ஆகாததால் அவள் வேறு துணையை நாடவே விரும்புவாள் ..

எந்த ஆணும்.. இந்தப் பெண்ணால் எனக்கு காம திருப்தி கிடைக்கவில்லை என இதுவரை விவாகரத்து கேட்கவில்லை!!! ஆனால் இக்காரணத்தால் விவாகரத்தை பெண்கள் கேட்பது அதிகம் !!!

இவ்வாறு தன்னுடைய இயலாமையை மறைக்க இவன் உண்டுபண்ண சட்டமே 'ஒருவருக்கு ஒருவர்' என்பது... இந்தச் சட்டம் உடையும்போது அதிகம் பொறாமை கொள்வது கண்டிப்பாக ஆணாக தான் இருப்பான்!!!! ஆகையால் 'ஆணாதிக்கத்தின் ஆரம்பம் காமமும், அதில் ஆணின் இயலாமையுமே' !!!

# 'தமிழகத்தின் ஒரு நூற்றாண்டுகாலப் போராட்டக் களங்கள்'

16.05.2015 சனிக்கிழமை

பறை இசையுடன் காலை அமர்வு தொடங்கியது. புதியகுரல் இணையதளத்தில் பதிவு செய்துள்ள தோழர்களின் அறிமுகமும், அதைத் தொடர்ந்து, பதிவு செய்யாதவர்களின் நேரடி அறிமுகமும் நடைபெற்றது. இதுவரை பதிவு செய்யாத தோழர்கள், உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அறிமுக அரங்கை தோழர் இரா.உமா ஒருங்கிணைத்தார்.

தோழர் ஓவியா வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். கொடைக்கானல் சந்திப்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்த தோழர்கள் மருத்துவர் ஜெயராமன், விஜி, யாழினி, மணிமாறன், எழில் அமுதன் ஆகியோர் பாராட்டப்பெற்றனர்.

தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் சிறப்பாகச் செயல்பட்டவர்களுக்கு, புதியகுரல் வழங்கும், 'சாதனைத் தமிழர்' விருது, இந்த ஆண்டு, பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் 1187 மதிப்பெண்கள் பெற்று, திண்டுக்கல் மாவட்டத்திலேயே முதல் இடத்திலும், மாநில அளவில் நான்காவது இடத்திலும் வெற்றி பெற்ற மாணவர் திராவிடனுக்கு வழங்கப்பட்டது. திராவிடனுடைய பெற்றோராகிய தோழர்கள் ஜாக்குலின்-ஜவகர் இணையாக பாராட்டப் பட்டார்கள். புதியகுரலில் முதல் சாதனைத் தமிழர் விருது பெற்ற, பல் மருத்துவ வல்லுனர் ஜெயக்குமார் திராவிடனுக்கு விருதினை வழங்கிப் பாராட்டினார்.

'தலித் இயக்கங்களின் போராட்ட வரலாறு' என்னும் தலைப்பில் பேராசிரியர் அரச முருகு பாண்டியன் உரையாற்றினார். தலித் மக்களின் கல்வி, நிலம், சமூக உரிமைகள் குறித்ததாக அவருடைய உரை அமைந்திருந்தது. இந்த அமர்வினை தோழர் கீதா இளங்கோவன் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, அரைமணி நேரம் பேராசிரியர் அரச முருகுபாண்டியன் உரை மீதான விவாதம் நடைபெற்றது.

அடுத்து, 'ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாறு' என்னும் தலைப்பிலான அமர்வினை தோழர் ஓவியா தொடங்கி வைத்து ஒருங்கிணைத்துக் கொண்டு சென்றார். திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த தோழர் தாமரைக்கண்ணன் இந்தத் தலைப்பில் உரையாற்றினார். 1928 முதல் 1932 வரையிலான சாதி ஒழிப்புப் போராட்டங்களை பட்டியலிட்டார். அறியபட்டிருக்கும் போராட்டங்களைத் தவிர்த்து பெரிய அளவில் கவனம் பெறாத பல நிகழ்வுகளை மய்யப்படுத்தி பேசினார். பின்னர் இந்த உரையின் மீதும் விவாதம் நடந்தது.

மாலை நேரத் தேநீருக்குப் பிறகு, தோழர் ஜவஹர் 'தாய்ச்சி' எனப்படும் உடற்பயிற்சியை சொல்லிக் கொடுத்தார். அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இரவு உணவுக்குப் பிறகு, 'பொருள்களை வாங்கிக் குவிப்பதா வாழ்க்கை' என்னும் தலைப்பில் கூட்டு விவாதம் நடைபெற்றது.



பெற்றோர்களும் , குழந்தைகளும் இணைந்து இந்த விவாதத்தில் பங்குபெற்றனர். நுகர்வுக் கலாச்சாரத்திலிருந்து விலகி, கொள்கை உறுதியோடும், பொருளாதாரச் சிக்கனத்தோடும் நம்மைப் போன்றவர்கள் வாழ்வது எப்படி? நம் குழந்தைகளை அதற்கு எப்படித் தயார்படுத்துவது? நுகர்வுத் தன்மையுள்ள, ஆபத்தான சமூகக் கலாச்சாரத்தை எதிர்கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்பன போன்ற பல்வேறு வினாக்களும், விவாதங்களும் இவ்வமர்வில் இடம்பெற்றன. இதில் பெரும்பாலான குழந்தைகள் ஒரு அணியாகவும் பெற்றோர்கள் இன்னொறு அணியாகவும் பிரிந்து நின்றதைக் காண முடிந்தது. பெரியவர்களில் கூட சிலர் சிறார்களுக்கு ஆதரவு அளித்தனர். இத்துடன் முதல் நாள் அமர்வு நிறைவுற்றது.

17.05.2015 ஞாயிற்றுக்கிழமை

மறுநாள் காலை தோழர் ஜவஹரின் தாய்ச்சி உடற்பயிற்சியுடன் தொடங்கியது. காலை உணவுக்குப் பிறகு, முதல் அமர்வு தொடங்கியது. ‘பெண்ணுரிமைப் போராட்டக் களங்கள்’ என்னும் தலைப்பில், தோழர் நர்மதா உரையாற்றினார். அமர்வினைத் தோழர் ஓவியா ஒருங்கிணைத்தார்.

அடுத்ததாக ‘மொழி, நிலம் சார்ந்த தேசிய இனப் போராட்ட வரலாறு’ அமர்வு நடத்தப்பட்டது. சிறப்புரையாளராகத் தோழர் ஆழி செந்தில்நாதன் வருகை தந்திருந்தார். தோழர் ஆழி செந்தில்நாதனை, ஆசிரியர் மணிமேகலை அறிமுகப்படுத்தினார். மதியஉணவுக்குப் பிறகு, காலையில் நடந்த அமர்வுகள் மீதான விவாதங்கள் நடைபெற்றன. இரவு உணவுக்குப் பிறகு, கருத்துக் கேட்டல் அமர்வு நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து, புதிய குரலின் இளைய தலைமுறையினர் இணைந்து ஒரு மேடை நிகழ்ச்சியைத் தயாரித்து அளித்தனர். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை மாதிரியாகக் கொண்டு, அங்கத நடையில் அவர்கள் நடித்துக் காட்டியபோது, அனைவரும் சிரிப்பொலியால் அரங்கை நிறைத்தனர். இரண்டு மணி நேரத்திற்குள்ளாக, அந்த நிகழ்ச்சிக்கான கருவை யோசித்து, காட்சியை வடிவமைத்திருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. அனல் ஆகாஷ் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தொகுப்பாளராகவும், இனியன், கவின் அமுதன், அகரன், ஓவியன், மகிழினி ஆகியோர் ஒவ்வொரு கதாபாத்திரத்தை ஏற்று நடித்தனர். உதயகுமாரின் நெறியாள்கையில் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினர். ஒவ்வொருவரின் நடிப்புத் திறமையும் அருமையாக வெளிப்பட்டது.

நாங்களும் இனிவரும் காலங்களில் சமுதாயப் பணிகளில் கண்டிப்பாகப் பங்கெடுப்போம் என்று இளைய தலைமுறையினர் உறுதியளித்தபோது, புதியகுரலுக்குக் கூடுதல் ஊட்டச்சத்து கிடைத்தது போல் அனைவரும் கைதட்டி வரவேற்றனர். தோழர் யாழினியின் நெறியாள்கையில் புதியகுரல் சிறார்கள் நடித்த “ஞானப்பழம்”என்ற காணொளி திரையிடப் பட்டது. பகுத்தறிவு பிரச்சாரம் கொண்ட இக்காணொளியினை அனைவரும் பாராட்டினர்.

கொடைக்கானல் சந்திப்பு இனிமையாக மட்டும் அல்ல மிக ஆழமான சிந்தனைகளையும் விவாதங்களையும் எழுப்புவதாக அமைந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட வரலாறு, பெண்ணுரிமைப் போராட்ட வரலாறு, சாதி ஒழிப்பு ஆகிய தலைப்புகளில் நிகழ்த்தப்பட்ட உரைகள் கடந்த கால தலைமுறையினர் நமக்காக கொடுத்திருக்கும் விலையை நினைவு படுத்துவதாக அமைந்திருந்தன.

## வரலாறு

வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி அருகே உதயேந்திரம் என்ற கிராமத்தில் மரங்களை ஏலம் விடும் ஏலநிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. ஏலத்தில் கிறிஸ்தவப் பறையர்கள் சிலர் கலந்துகொண்டனர். ஏலத்திற்காக போடப்பட்ட பெஞ்சுகளில் அவர்கள் அமர்ந்து விட்டனர். ஏலம் நடத்தும் கர்ணம் ஒரு அய்யங்கார். உடனே அவர், அமர்ந்திருந்த தலித்துகளை விரட்டிவிட்டு, அவர்கள் அமர்ந்த பெஞ்சையும் தூக்கி வீசிவிட்டார். 11.05.1927 இக்கொடுமை நிகழ்ந்தது. சுயமரியாதை இயக்கத்தின் முயற்சியால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அந்த இயக்கத்தின் வழக்கறிஞர் ஞானப்பிரகாசம் என்பவரால் வழக்கு நடத்தப்பட்டு பார்ப்பனருக்கு தண்டனை வாங்கித்தரப்பட்டது. குடி அரசு 14.10.1928

சேலம் மாவட்டம் பஞ்சப்பட்டி நகராட்சித் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்சேர்ந்த பெரியதம்பி என்பவர் தமது குடும்பத்துடன் காடையாம்பட்டி செல்லவேண்டியிருந்தது. அதற்காக சித்திரச்சாவடி என்ற மோட்டார் நிறுத்தத்துக்கு வந்து மோட்டாரில் ஏறியுள்ளார். அப்போது மோட்டார் நடத்துனர்கள் அவரிடம் என்ன ஜாதி என்று விசாரித்து, அவர் தாழ்த்தப்பட்டவர் என்று அறிந்து, அவரை வண்டியைவிட்டுக் கீழே தள்ளிவிட்டனர். அதைக் கண்டித்துப் போராடி, ஜில்லா போர்ட் தலைவர், கலெக்டர் அனைவரையும் சந்தித்து சட்டாீதியான நடவடிக்கைகளை எடுத்து அக்கொடுமையை ஒழித்தது சுயமரியாதை இயக்கம். குடி அரசு 01.05.1932

முனைவர் பூ.மணிமாறன்

# நிறைகளும் குறைகளும்



# இலவச கட்டாய கல்விச் சட்டம் 2009

நாம் அனைவரும் நமது குழந்தைகளின் தேர்ச்சி பெற்ற வகுப்புகளுக்கான சேர்க்கைக்காக அலைந்து கொண்டிருப்போம் அல்லது அலைந்து ஓய்ந்திருப்போம். நாம் கல்விக்கான அலைச்சலுக்கு இடையே நமக்குரிய கல்வி உரிமைகள் குறித்தும் சிந்திப்போம். நமது மத்திய மாநில அரசுகள் வருடாந்திர நிதிநிலை அறிக்கையில் அதிகமான நிதியினை இராணுவத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக உயர்கல்விக்கென ஒதுக்கப்படுகிறது. ஆனால் பள்ளிக்கல்விக்கென குறைந்த அளவிலேயே ஒதுக்கப்படுகிறது. எனவே பள்ளிக் கல்விக்காக உள்ள சட்டங்கள் வாயிலாக நமக்கு நல்கப்பட்டுள்ள உரிமைகள் குறித்து நாம் அறியவேண்டியது அவசியமாகும். அத்தகைய உரிமைகளை சரியான முறையில் அறிந்து நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணித்து உரிய முறையில் உரியவர்கள் அடையவேண்டும். அத்தகைய மிக முக்கியமான சட்டமே இலவசக் கட்டாய கல்விச் சட்டமாகும்.

6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கும் வகையில் மத்திய அரசு கடந்த 2009-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலவச - கட்டாயக் கல்விச் சட்டத்தை கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கை, ஆசிரியர் நியமனம், பள்ளிகளுக்கு அங்கீகாரம், ஆசிரியர் - மாணவர் விகிதாச்சாரம், பள்ளி வளர்ச்சி, கல்வி மேம்பாடு உள்பட பல்வேறு பிரிவுகளில் புதிய விதிமுறைகள் வகுக்கப் பட்டன. அதன்படி, தனியார் பள்ளிகள் அருகே வசிக்கும் ஏழை மாணவர்கள், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினர் ஆகியோருக்கு 25 சதவீத இடங்களை ஒதுக்க வேண்டும். இதன் மூலம் பிற்படுத்தப்பட்ட ,மிகவும் பிற்படுத்தப் பட்ட,தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பயனடைவார்கள். அவர்களுக்கான கட்டணத்தை அரசே செலுத்திவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், எல்.கே.ஜி உள்பட கீழ்நிலை வகுப்புகளில் மாணவர்களை சேர்க்க நுழைவுத் தேர்வு நடத்தக்கூடாது. எட்டாம் வகுப்பு வரை எந்த குழந்தையையும் தேர்ச்சியின்மை ஆக்கக்கூடாது. அவர்களை அடிக்கக்கூடாது. மனரீதியாக துன்புறுத்தக் கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள் மத்திய அரசு கொண்டுவந்த இலவச, கட்டாயக் கல்விச்சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. தனியார் சுயநிதி பள்ளிகளில் ஏழைகள் ( குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்குள் ), ஒடுக்கப்பட்ட பிரிவினர் ( தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ), கைவிடப் பட்டோர் ( அனாதைகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டோர், திருநங்கைகள், துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகள்) ஆகியோருக்கு 25 சதவீத இடங்கள் ஒதுக்க வேண்டும். அவர்களின் படிப்புச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும்.

**இதுதொடர்பாக அரசிதழில்வெளியான விவரம்:**

தனியார் சுயநிதி பள்ளிகளில் ஏழைகள் (குடும்பஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்குள்), நலிந்த பிரிவினர் (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர்),கைவிடப்பட்டோர் ( அனாதைகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர், திருநங்கைகள், துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகள் ) ஆகியோருக்கு 25 சதவீத இடங்கள் ஒதுக்க வேண்டும். அவர்களின் படிப்புச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். படிப்புச் செலவு என்பது அரசுப் பள்ளிகளில் ஒரு மாணவருக்கு செய்யப்படும் செலவுக்கட்டணம். இதில் எது குறைவான நிதியோ அது நிர்ணயிக்கப்படும்.

இந்த நிதியைப் பெறுவதற்காக தனியார் பள்ளிகள் தனி வங்கிக் கணக்கைப் பராமரிக்க வேண்டும். உரியத்தொகை அந்த கணக்கில் ஆன்லைனில் செலுத்தப்படும். பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வரும்போது வயதுச் சான்றிதழ் இல்லை என்ற காரணத்தினால் மாணவர் சேர்க்கையை நிராகரிக்கக் கூடாது. பிறப்புச் சான்றிதழ் கொண்டுவராத பட்சத்தில் குழந்தை பிறந்த மருத்துவமனையில் கொடுத்த ஆவணத்தையோ, அங்கன்வாடி ஆவணத்தையோ, அதுவும் இல்லாவிட்டால் பெற்றோர் அல்லது குழந்தையின் பாதுகாவலர் பிறந்த தேதியைக் குறிப்பிட்டு அளிக்கும் உறுதிமொழியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பள்ளிகள் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கும்போது அரசு நிர்ணயித்துள்ள கல்வி கட்டணத்தை மட்டுமே வசூலிப்போம் என்று உறுதிமொழி அளிக்க வேண்டும். அங்கீகார விதிமுறைகளை மீறினால் ஆய்வு செய்து அங்கீகாரம் ரத்துசெய்யப்படும். ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியிலும் 9 பேர் கொண்ட பள்ளி நிர்வாகக்குழு அமைக்கப்பட வேண்டும். அதில் 6 பேர் மாணவர்களின் பெற்றோராக இருக்க வேண்டும். எஞ்சிய இடங்களில் ஆசிரியர், உள்ளாட்சி நிர்வாகி, உள்ளூர் கல்வியாளர் ஆகியோருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். கல்வி சார்ந்த பணிகளைவிட ஆசிரியர்களுக்கு இதரப் பணிச்சுமைகளை கொடுக்கக் கூடாது. உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ எந்தக் குழந்தையையும் துன்புறுத்தக்கூடாது. தனியார் பள்ளிகளில், ஆசிரியர் பணிக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் கல்வித்தகுதி இல்லாமல் பணிபுரிபவர்கள் இந்த சட்டம் அமலுக்கு வந்த 5 ஆண்டிற்குள் அந்த தகுதியை பெற்றால்தான் தொடர்ந்து பணிபுரிய முடியும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்காக அரசு நிர்ணயித்துள்ள சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**இலவச கட்டாய ஆரம்பக் கல்வி :**

6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளும், தங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள பள்ளியில், இலவச மற்றும் கட்டாயக்கல்வி கற்க உரிமை பெறுகிறார்கள். ஆரம்பக்கல்வி பெற, குழந்தைகளோ அல்லது பெற்றோரோ நேரடியான ( பள்ளிக்கட்டணம் ) மற்றும் மறைமுகமான ( சீருடைகள், பாடப் புத்தகங்கள், மதிய உணவு, போக்குவரத்து ) எந்தக்கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. குழந்தைகளின் ஆரம்பக்கல்வி பூர்த்தியாகும் வரை, கல்விக்கான அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்கும்.

**சமுதாயத்தின் பங்கு:**

ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்தப்படும் பள்ளி நிர்வாகக்குழுவில் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுப்பினர்களாக இருப்பர். பள்ளி நிர்வாகக்குழு, பள்ளிக்கான மேம்பாட்டுத் திட்டங்களை வகுப்பது, அரசுநிதியை முறையாகப் பயன்படுத்துவது மற்றும் ஒட்டுமொத்த பள்ளியின் சூழலைக் கண்காணிப்பது ஆகிய பணிகளைச் செய்யும். பள்ளி நிர்வாகக் குழுக்களில் 50 சதவீதம் பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதை இச்சட்டம் கட்டாயமாக்கி உள்ளது. சிறுவர் மற்றும் சிறுமியருக்கான தனித்தனிக் கழிப்பறைகளை ஏற்படுத்துவது, உடல் நலம், சுகாதாரம், மற்றும் தூய்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து கல்வியை முழுமை பெற வைப்பது ஆகியவற்றில் இவ்வாறான சமுதாயப் பங்கேற்பு பெரிதும் உதவும்.

**குழந்தைகள் விரும்பும் பள்ளி :**

நல்ல கல்விச்சூழலை ஏற்படுத்த, அனைத்துப் பள்ளிகளும் கட்டமைப்பு மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான நெறிகளைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். ஆரம்பக்கல்வி நிலையில், ஒவ்வொரு 60 குழந்தைகளுக்கும் நன்கு பயிற்சிபெற்ற இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் பள்ளிக்கு வருகை தருவது, பாடத்திட்டத்தை முழுமை செய்வது, குழந்தைகளின் கற்றுக்கொள்ளும் திறனை மதிப்பிடுவது, தவறாமல் பெற்றோர் - ஆசிரியர் கூட்டங்களை நடத்துவது ஆகியவற்றை ஆசிரியர்கள் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும்.

வகுப்புக்குத் தகுந்தவாறு அல்லாமல், மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு ஆசிரியர்களின் எண்ணிக்கை இருக்கும். குழந்தைகள் சிறப்பாகக் கற்பதை உறுதி செய்ய ஆசிரியர்களுக்கு தேவையான உறுதுணையை அரசு நிறைவேற்றும். பள்ளி நிர்வாகக்குழுவுடன் இணைந்து, பள்ளியின் தரத்தையும் சமத்துவத்தையும் உறுதிசெய்வதில் சமுதாயமும், பெற்றோரும் முக்கியப் பங்காற்ற வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் கல்வி உரிமைக்கனவை நனவாக்குவதற்குத் தேவையான அனைத்து சட்ட

வடிவங்களையும், ஏதுவான சூழ்நிலைகளையும் அரசு உருவாக்கும்.

**நடைமுறை மற்றும் நிதி :**

குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் உதவியுடன், ஒவ்வொரு குழந்தையும் தங்கள் உரிமையான தரமான ஆரம்பக்கல்வி பெறுவதை அரசு உறுதி செய்வதற்கு இச்சட்டம் ஒரு துவக்கத்தை அளித்துள்ளது.

இதற்குத் தேவைப்படும் நிதியை, மத்திய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளும். மத்திய அரசு தேவைப்படும் நிதியைக்கணக்கிடும். மாநில அரசுகளுக்கு, இதிலிலிருந்து குறிப்பிட்ட சதவீதம் நிதியாக வழங்கப்படும். கல்விஉரிமைச்சட்டத்தை நிறைவேற்றத் தேவையான கூடுதல் நிதியை மாநிலங்களுக்கு வழங்குவதை பரிசீலிக்கும்படி, மத்தியஅரசு, மத்திய நிதிக்குழுவை(Finance Commission) கேட்டுக்கொள்ளும். சட்டத்தை நடைமுறை படுத்தத் தேவைப்படும் கூடுதல்நிதிக்கு மாநிலஅரசுகள் பொறுப்பேற்க வேண்டும். சமுதாயஅமைப்புகள், மேம்பாட்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் குடிமக்களின் பங்களிப்புடன் நிதிப்பற்றாக் குறையை போக்க முடியும்.

**கல்வி உரிமைச் சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் :**

இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்கத் தேவைப்படும் ஆய்வுகளைச் செய்வதற்கும், புகார்களை விசாரிப்பதற்கும், குழந்தை உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய கமிஷனுக்கு ( National Commission for the Protection of Child Rights - NCPCR), வழக்குகளை விசாரிக்க ஒரு குடிமை நீதிமன்றத்திற்கு அளிக்கப்படும் அனைத்து அதிகாரங்களும் வழங்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநிலகமிஷன்கள்( State Commission for the Protection of Child Rights - SCPCR) அல்லது கல்வி உரிமைப் பாதுகாப்பு ஆணையங்களை ( Right to Education Protection Authority - REPA) அமைந்துள்ளது. குறைகள் பற்றி மனு அளிக்க விரும்பும் எவரும், உள்ளூர் அதிகாரிகளிடம் எழுத்து மூலமான புகார் அளிக்கலாம். குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநிலகமிஷன்கள் (State Commission for the Protection of Child Rights - SCPCR) அல்லது கல்வி உரிமை பாதுகாப்பு ஆணையங்களால் மேல்முறையீடுகள் மீது முடிவுகள் எடுக்கப்படும். அவற்றால் வழங்கப்படும் தண்டனைகளை நிறைவேற்ற, மாநிலஅரசின் நியமனம் பெற்ற அதிகாரியின் ஒப்புதல் தேவைப்படும்.

**பள்ளிச் சேர்க்கை நெறிமுறைகள் :**

நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2000- ன் படி ( RTE Act, 2009 ), பள்ளிச் சேர்க்கை நெறிமுறைகள் இருப்பதை உறுதிசெய்ய, தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ( NCPCR) தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இலவசக் கட்டாயக் கல்விச் சட்டத்தின் விதிகளின்படி குழந்தைகளின் சேர்க்கை நடைபெற வேண்டும்.

வகுத்துரைக்கப்பட்ட பிரிவு மற்றும் அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளும், அரசு உதவி பெறும் பள்ளிகளைப் போன்றே, ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 25ரூ இடஒதுக்கீட்டை உத்தரவாதப் படுத்த வேண்டும். மேலும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் குறித்த அட்டவணை தயாரிக்கப்பட்டு, அருகாமைப்பகுதிக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நவோதயா பள்ளிகள் 'வகுத்துரைக்கப்பட்ட பிரிவைச்' சார்ந்ததாக இருப்பதால், இச்சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. ஆனால், இச்சட்டத்தின் பிரிவு 13 விதி விலக்குகள் இன்றி அனைத்துப் பள்ளி களுக்கும் பொருந்தும் என்றும் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

**இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின் பிரிவு 13 :**

எந்தப் பள்ளியோ அல்லது தனிநபரோ, குழந்தையின் பள்ளிச் சேர்க்கையின் போது, அதன் பெற்றோர் அல்லது பாதுகாப் பாளரிடமிருந்து தலைக்கட்டணம் வசூலிப் பதோ அல்லது முன்தேர்வு முறைக்கு உட்படுத்து தலோ கூடாது.

உட்பிரிவு(1)க்குப் புறம்பாக, தலைக்கட்டணம் வாங்கும் பள்ளிகள் மற்றும் தனி நபர்களுக்கு வசூலிக்கப்பட்ட கட்டணத்தைவிடப் பத்து மடங்கு வரை அபராதம் விதிக்கப்படும். குழந்தைகளைப் பள்ளியில் அனுமதிப்பதற்கு முன் தேர்வுமுறைக்கு உட்படுத்தினால், முதல் தடவையாக மீறும் பொழுது ரூ 25,000/- வரையிலும், தொடர்ந்து மீறும் ஒவ்வொரு முறையும் ரூ 50,000/- வரையிலும் அபராதம் விதிக்கப்படும். இத்தனைப் பாதுகாப்பான கல்வி உரிமைகளை உள்ளடக்கிய விதிமுறைகள் கூறப்பட்டாலும் இவற்றிலும் சில விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன.

**இலவச கட்டாய கல்விச்சட்டம் 2009: நிறைகளும் குறைகளும்:**

இச்சட்டம் கல்வியியலாளர்கள் எதிர்பார்த்த முறையில் அமையவில்லை. அரசு கடைபிடிக்கும் தாராளமய, தனியார்மயக் கொள்கைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. பெயரில் இலவசம் என்ற சொல் இருந்தாலும் கட்டணப்பள்ளிகளுக்கும் இடம் அளிப்பதால் அனைத்துக் குழந்தை களுக்கும் இலவசக் கல்வி கிடைக்காது. சட்டத்தில் சில வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. அவற்றில் சில:

பள்ளிகள் அமைவிடம் குழந்தைகள் எளிதாகச் சென்றடையும் வண்ணம் அருகில் இருக்க வேண்டும்; 5 -ஆம் வகுப்பு வரைப் படிக்க 1 கி.மீ. தொலைவிற்குள்ளும், எட்டாம் வகுப்பு வரைப் படிக்க 3 கிமீ தொலைவிற்குள்ளும் பள்ளிகள் அமைய வேண்டும்.

அரசு அங்கீகாரமில்லாது எப்பள்ளியும் இயங்கக்கூடாது. அங்கீகாரம் பெறாத அல்லது மறுக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை வேறு பள்ளியில் சேர்ப்பது அரசின் பொறுப்பாகும். பள்ளிச்சேர்க்கை எளிதாக்கப்பட்டுள்ளது. நுழைவுத்தேர்வு, பெற்றோரை அல்லது குழந்தைகளை நேர்காணல், வயதுச்சான்றிதழ், நன்கொடை ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. மாற்றுகைச்சான்றிதழ் குழந்தைகளின் உரிமை. அதனைத் தர மறுத்தாலோ, காலதாமதம் செய்தாலோ தண்டனைக்கு உட்படுத்தப்படும்.

பள்ளியில் சேராமலோ, அல்லது பள்ளியிலிருந்து இடைவிலகியோ இருக்கும் குழந்தைகள் பள்ளியில் மீண்டும் சேரும்போது அவர்கள் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அக்குழந்தைகள் சேரும் வகுப்பிற்குத் தகுதியுள்ளவராக்கும் பொறுப்பு பள்ளியைச் சார்ந்தது. 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன்பருவக்கல்வி அளித்திட வேண்டும். பள்ளிகளில் எவ்வித பாகுபாடுகளுக்கும் எந்தக் குழந்தையும் உட்படக்கூடாது. பள்ளிகளில் உடல், மனரீதியான தண்டனைகள் ஒழிக்கப் பட்டுள்ளது. எந்த வகுப்பிலும் மாணவர்கள் ஓராண்டிற்கு மேல் தக்கவைக்கக் கூடாது. இடையில் பள்ளியை விட்டு வெளியேற்றவும் கூடாது.

அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு இடங்கள் பள்ளிக்கு அருகில் வசிக்கும் எளியவர் வீட்டுக் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். தகுதி பெற்ற ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும். கல்விப்பணியல்லாத மாற்றுப்பணிகளில் ஆசிரியர்களைப் பயன்படுத்தக்கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கும் பெற்றோரைப் பெரும்பான்மையோராகக் கொண்ட பள்ளி நிர்வாகக்குழு அமைக்கப்பட்டு செயல்பட வேண்டும்.

இவ்வாறு சில சிறப்பம்சங்கள் கொண்ட சட்டத்தில் பல்வேறு கவலை தரும் சரத்துகளும் இருக்கின்றன. அவற்றில் சில:

அரசமைப்பு சாசனம் அளித்துள்ள சமத்துவக் கோட்பாட்டிற்கு முரணாக இச்சட்டம் அமைந்துள்ளது. இச்சட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதி பற்றி மௌனம் சாதிக்கின்றது. மோகினி ஜெயின், உன்னி கிருஷ்ணன் வழக்குத் தீர்ப்புகளின் படி அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும். சட்டத்தின் தலைப்பு இலவசக் கட்டாயக் கல்வி என்று இருந்தும், கட்டணப்பள்ளிகளை ஏற்றுள்ளது பெரும் குறை. தன் பொறுப்பிலிருந்து அரசு நழுவுகின்றது என்பதோடு, தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு ஒதுக்கீட்டில் சேரும் மாணவருக்கான கட்டணத்தொகையை அப்பள்ளிகளுக்கு அரசு வழங்கிடுவது நியாயமற்ற செயலாகும். பள்ளி நிர்ணயித்த கட்டணத்திற்கு அதிகமாகப் பெறப்படுவதே தலைக்கட்டணம் என்று வரையறுத்துள்ளதால் தலைக்கட்டணத்தையும் சேர்த்து பள்ளிகள் கட்டணத்தை நிர்ணயிக்க வழிசெய்யப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் சேரும் எளியவர் குடும்பத்து மாணவருக்கு அரசு திருப்பித்தரும் கட்டணத்திற்கு மேல் அப்பள்ளிகள் வசூல் செய்தால் அத்தொகை அம்மாணவர் தலையில்தான் விழும். இது போன்ற பல குறைபாடுகள் சட்டத்தில் உள்ளன.

**கட்டாயக் கல்வி விதிகள் :**

நடுவணரசு மாதிரி விதிகளை மட்டும் வெளியிட்டுவிட்டு அந்தந்த மாநில அரசுகள் விதிகளை இயற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. பொதுவாக ஒரு சட்டத்தினை நடைமுறைப்படுத்த விதிகள் சரத்துவாரியாக விளக்கங்களும், நடைமுறைகளையும் கொண்டிருக்கும். ஆனால் சட்டத்தின் சில பகுதிகளை ஒட்டியே மாதிரி விதிகள் அமைந்துள்ளன. பல மாநிலங்கள் விரிவாக விதிகள் இயற்றியுள்ளன. ஆனால். திமுக அரசு தயாரித்த முன்வரைவு விதிகளும், இன்றைய அரசு வெளியிட்ட விதிகளும் மாதிரி விதி வரிசையிலேயே அமைந்து பலவற்றிற்கு விளக்கங்கள் இல்லாதவாறு அமைந்துள்ளன.

முன்வரைவு விதிகள் சட்டத்திற்குப் புறம்பாகப் பல மாற்றங்களைக் கொண்டுள்ளன. முக்கியமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் முழுமையாக மறுத்து, உள்ளாட்சிகள் என்பதற்கு மாறாக வட்டாரக் கல்வி ஆணையங்கள் என்பவற்றை உருவாக்கி, வட்ட, மாவட்ட, மாநில அளவில் அவற்றை நடைமுறைப்படுத்த உதவிக்கல்வி அலுவலர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், இயக்குநர் என்று வரையறுத்து முழு அதிகாரத்தையும் அரசு அதிகார வர்க்கத்திடம் ஒப்படைத்திருப்பது அதிகாரப் பரவல் கோட்பாட்டிற்கு எதிரானது. அதிகார வர்க்கம் தங்கள் அதிகார வரம்பைச் சிறிதும் குறைத்துக் கொள்ள விரும்பாத நிலையையே இது எடுத்துக்காட்டுகின்றது. அரசு மக்கள் பக்கமா, அதிகார வர்க்கத்தின் பக்கமா என்ற வினாவிற்குத் தெளிவான விடை தெரிந்துவிட்டது. எக்காரணம் தொட்டும் உள்ளூர் அமைப்புகள் வலிமை பெறுவதை அரசோ, அரசு அதிகாரிகளோ விரும்பவில்லை என்பதை அறியலாம்.

இரு அரசுகளும் குறை தீர்ப்பு மையங்கள் அமைத்தல், குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம், கல்வி உரிமைப் பாதுகாப்பு ஆணையம் பற்றிய பகுதிகளை முழுமையாக நீக்கிவிட்டதும் கவனிக்கத்தக்கது. அடிப்படையில் இரு அரசுகளும் ஏழை, எளியவர் நலனைப் புறக்கணிப்பதில் ஒரு மனத்தவர். சட்டமோ, மாதிரி விதிகளோ, தமிழக விதிகளோ ஆசிரியர்களுக்குக் கல்வித் திட்டத்தில் உரிய பங்கு அளிக்காது. அவர்களைக் கூலிக்காரர்கள் போன்றே நடத்த முற்படுகின்றன. அதுபோலவே மாணவரும் உரிமை ஏதுமற்ற ஜடப் பொருளாகவே கருதப்படுகின்றனர். ஆனால், கல்வி அமைப்பில் மிக முக்கியமான பாத்திரங்கள் ஆசிரியர்களும், மாணவர்களும்தான் என்பதை ஏற்க அரசுகள் தயாராக இல்லை. இக்கண்ணோட்டம் மிகவும் பழுதானது, முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லாதது.

நலிந்தவருக்கு தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை ஒரு முற்போக்கான திட்டமாக நடுத்தர வர்க்கத்தினர் வரவேற்றுள்ளனர். அவ்விடங்களைக் கைப்பற்றுவதில் குறியாக உள்ளனர். தனியார் பள்ளிகளோ குடிசைவாழ் மக்கள் தங்கள் பள்ளியில் சேர்ந்தால் சேரி மொழியும், ஒழுக்கக் கேடும் பிற மாணவர்களைத் தொத்திக் கொள்ளும் என்றும், குடிசை வாழ் மாணவர்களின் கற்றல் திறன் குறைவாக இருக்குமாதலால் ஆசிரியர் நேரத்தை அதிகமாக அவர்கள் எடுத்துக் கொள்வர் என்றும், அதனால் பிற மாணவருக்கான ஆசிரியர் நேரம் குறையுமென்றும் வாதிட்டு இந்த சரத்தை நீக்க வேண்டி செயல்படுகின்றனர்.

ரூபாய் 2 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உள்ளவரே நலிந்தவர் என்று தமிழக அரசு விதிகள் வரையறுத்துள்ளதால் குடிசைவாழ் மக்களுக்குப் பதிலாக நடுத்தர வர்க்கத்தினர் வருமானச் சான்றிதழ் கொடுத்து இவ்விடங்களில் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பார்கள். எளியவர் தொடர்ந்து அரசுப் பள்ளிகளே தங்கள் புகலிடம் என்று சமாதானம் அடைந்து விடுவார்கள்.

மக்கள் பொறுப்பு :

நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அரசியல் சட்டத்திருத்தம் கொண்டுவர 12 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதும், கல்விஉரிமைச்சட்டம் இயற்றிட மேலும் நான்கு ஆண்டுகளானதும், விதிகள் இயற்றிட இன்னும் இரண்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டதும் வெளிப்படுத்தும் உண்மை என்னவென்றால், அரசுகளுக்கு மெய்யாலுமே அனைத்து மக்களுக்கும் தரமான இலவசக்கல்வி அளிக்க வேண்டுமென்பதில் அக்கறை கிடையாது என்பதே. கண்துடைப்பாக வந்திருக்கும் இந்தச் சட்டத்தின் பயன் எளிய மக்களைச் சென்றடையப் போவதில்லை என்பது உறுதி.

கல்விக்காக மக்கள் ஒருமித்தக் குரலோடு போராட முன்வராததே இக்கல்வி மறுப்பிற்குக் காரணமாகும். அரசுப்பள்ளிகள் சீராக இயங்குவதை உறுதி செய்வதும், தங்கள் வீட்டருகில் உள்ள பள்ளியில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கும் உரிமையும், பாகுபாடுகள் ஏதுமற்றப் பொதுப்பள்ளித் திட்டம் வேண்டியும் மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. ஒவ்வொரு சமூக மாற்றத்திற்காக களமாடும் அமைப்புகள் அனைத்தும் தங்களது கவனத்தை கல்வி சார்ந்த இது போன்ற பிரச்சனைகளிலும் தம் கவனத்தைக் குவிக்க வேண்டும். தொடர்ந்து ஏமாற்றப் பட்டவர்களாக இருக்கும் நிலையிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள மக்கள் முன்வர வேண்டும். கற்றறிந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அனைவரும் ஒன்று கூடுவோம். சிற்சில சலுகைகளைக் கண்டு மயங்காது, நமக்கான உரிமைகளை முழுமையாக அறிந்து அடைந்து முழுமையான சமத்துவம் நோக்கிய பயணத்தைத் தொடங்குவோம்.

முன் அட்டை உள் பக்கத் தொடர்ச்சி

மிகப்பெரிய அளவில் பிரச்சாரம் நடைபெறும். இதுபோன்ற நிகழ்வுகள் பள்ளி - கல்லூரி மாணவர்கள் மத்தியில் பெரும் எழுச்சியை உருவாக்கியது. அதன் விளைவாக, மாணவர்கள் கருப்புச்சட்டை அணிந்திருக்கும் நமது தோழர்களிடம் நெருங்கிப்பழகினர். கோவை இராமக்கிருட்டிணன், கோவை ஆறுச்சாமி ஆகியோர் அந்த மாணவர்களிடம் அன்றைய நிலை குறித்தும் தமிழீழ விடுதலையின் அவசியம் குறித்தும் புரியவைத்தார்கள். இதனால் விடுதலைப்புலிகளுக்கான ஆதரவு காட்டுத்தீயாகப் பரவியது.

**அச்சமயங்களில் மாணவர்களின் ஆதரவு எந்த அளவில் இருந்தது?**

கருப்புச்சட்டைத் தோழர்கள், தி.க காரர்கள் ஒரு நிலை எடுத்தால் அது சரியாக இருக்கும் என முடிவுசெய்து, மாணவர்கள் போராட்டக்களத்தில் இறங்கினர். நான் தோழர்கள் முத்து, சிவஞானம், மற்றசில தோழர்கள் புலிகளின் ஏடுகள், காலண்டர் போன்றவற்றை பேருந்துகளில் விற்பனைசெய்தபொழுது, பொதுமக்கள், நடுநிலையாளர்கள் பேசிய ஆதரவுப் பேச்சுக்கள் இன்றும் ஒரு மகிழ்ச்சியான உணர்வை ஏற்படுத்துகின்றன.

இப்படியாக ஈழவிடுதலைக்கான பிரச்சாரம் சூடுபிடித்து இருந்தநிலையில் திராவிடர் கழகம் தான் சரியான இயக்கம் என விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவு முடிவெடுத்தது. அதில் உண்மையான ஈழவிடுதலையின் ஆதரவாளர்கள் என கொளத்தூர் மணி அண்ணன், கோவை கு.இராமக்கிருட்டிணன் அண்ணன் ஆகியோரை அடையாளம் கண்டனர். திராவிடர் கழகமும் புதிய உத்வேகத்துடன் இயங்கியது.

**'விடுதலைப்புலிகள் தோழமைக்கழகம்' பற்றிய தகவல்களைக் கூறுங்கள் தோழர்...**

இந்தக் கண்காட்சி பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி, திருப்பூர், குன்னூர், மேட்டுப் பாளையம் ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்டது. பெங்களூர், பாம்பே போன்ற பகுதிகளிலும்கூட ஆதரவு இருந்தது. ஈழவிடுதலைப்போர், விடுதலைப்புலிகளின் மீது இருந்து ஈர்ப்பு இவற்றால் மதம் சார்ந்த மக்கள்கூட அந்தந்தப் பகுதியில் ஈழவிடுதலைப்போராட்ட வரலாற்றை டி.வி மூலம் பிரச்சாரம் செய்ய முன்வந்தனர். அதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நானும் பல தோழர்களும் அழைக்கப்பட்டு அங்கு சென்று பிரச்சாரம் செய்தோம். அதன் மூலமாகப் புதிதாக நிறைய தோழர்கள் கிடைத்தனர். பிறகு அவர்களே தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்தும் நிலை உண்டானது.

இதன் தொடர்ச்சியாக, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்கள், நெடுமாறன் அய்யா அவர்கள் ஆகியோரை அழைத்து, பெரும் பொதுக்கூட்டத்தை நடத்தி, அதில் 1 இலட்ச ரூபாய் நிதி வழங்கினோம். அப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடரவேண்டும் என முடிவுசெய்து, திராவிடர் கழகத் தோழர்கள் தலைமையில் அனைத்து அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும், பொதுமக்களும் பங்கேற்கும் புதிய அமைப்பும் உருவானது. அதுதான் “விடுதலைப்புலிகள் தோழமைக்கழகம்”.

அந்த அமைப்பின் மூலமாக திட்டமிட்டபடி தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் பிரச்சாரங்களை நடத்தி, நிதி திரட்டி ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக புலிகள் அமைப்புக்கு நிதி வழங்கி வந்தோம். அப்பொழுது புலிகளின் யாழ் தளபதியாக இருந்த 'கிட்டு' என்ற கிருஷ்ணகுமார் அவர்கள், தான் கையொப்பமிட்ட ரசீதை வழங்கினார். இதைப் பார்த்த நன்கொடையாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அதேசமயத்தில் இனி நன்கொடை ரசீதுகளில் தலைவர் பிரபாகரன் கையொப்பமிட்டு அனுப்புவார் என்று புலிகளின் ஏட்டில் வந்த செய்தியைப் பார்த்து தோழர்களும் மிகவும் உற்சாகமடைந்தார்கள். நன்கொடை திரட்டும் பணி முன்பைக் காட்டிலும் தீவிரமாக நடைபெறத் தொடங்கியது.

நான் என் வீட்டையே மறந்து பணியாற்றிக்கொண்டிருந்தேன். அதன் விளைவாக, எனது தந்தையார் இறந்த செய்திகூட எனக்கு 4 நாட்கள் கழித்துத்தான் தெரியவந்தது. அவர் இறந்து 4 நாட்கள் கழித்து நான் மேட்டுப்பாளையத்தில் ஈழவிடுதலைப் பிரச்சாரக்கூட்டத்தில் இருந்தபொழுது விடுதலைப்புலித்தோழர் காதர் என்பவர்தான் என்னிடம் தகவலைக்கூறினார்.

அப்போது இவ்வளவு தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத காலம். பொள்ளாச்சி தோழர்கள் கோவை கண்காட்சியில் உள்ள தோழர்களிடம் விசாரித்து வீட்டுக்குத் தகவல் கொடுத்தனர். அதன்பிறகு எனது உறவினர்கள் கோவை கண்காட்சிக்கு வந்து தோழர் சன் பாண்டியனிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோது, நான் பத்திரிகை, சுவரொட்டிகளை வாங்க கோவைக்கு வந்தேன்.

- தொடரும்

நேர்காணல்- கிணத்துக்கடவு நிர்மல், ஈரோடு வெங்கட்

## சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு - பகுதி 9

அரசூர் அ.ப.சிவா

# அறிவியல் மனப்பான்மை

போன மாசம் முழுக்க முகநூல், வாட்ஸ் அப், அப்படின்னு எதைத் தொறந்தாலும் எக்கச் சக்க சயிண்ட்டுஸ்கள் அக்னி நட்சத்திர நேரத்தில மழை வந்ததால பாதி கொறஞ்சு போச்சு ..

கிருஸ்ணன் டீவி ஸ்டேஷ்ன் தொறந்ததைப் பத்தியும், சிவன் விநாயகனுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செஞ்சதப் பத்தியும், புஸ்பக விமானம் தான் ரைட் சகோதரர்கள் விமானத்துக்கு மாதிரி வடிவம் என்பதையும், வாகனத்துல முன்னாடி எலுமிச்சம் பழம் கட்டினா தூக்கம் வராது, கோவில்களின் கர்ப்பகிரகத்துல பாசிட்டிவ் எனர்ஜி இருக்குது, இப்படி பல அறிவியல் கண்டுபிடிப்புகள் .

அடச்சே, உத்தமவில்லன் கமல் மாதிரி ஒரே கொழப்பமாவே இருக்குதேன்னு சொல்லி, வாய் மூடல அதுக்குள்ள கடவுள் உண்டுன்னு, தான் கண்டுபிடிச்சத தஞ்சாவூரில கல்வெட்டாக்கிட்டு பக்கத்துலேயே உட்கார்ந்துட்டு இருக்காரு அர்ஜின் சம்பத்.

வடிவேலு மாதிரி கண்ணைக் கட்டிட்டு வர்றதுக்குள்ள லேப்-டாப் பை மூடி வைத்து விட்டு அக்கா ஜோதிகாவை 36 வயசுல ஒரு எட்டு போய் பார்த்துட்டு வரலாமுன்னா போனா !! ஜீன்7ல் பொதுக்கூட்டமாமா எந்த செவுர பார்த்தாலும் வீரத்துறவி, வீரத்துறவின்னு மறுபடியும் மண்டையை பிச்சுகிட்டு ... ஏண்டா? எல்லாத்தையும் துறந்தவன்தான் துறவி. வீரமுள்ளவன் எப்படி? துறவியாக முடியுமுன்னு கேட்டா தம்பி நாராயணனோ, நான் அவ்வளவு பெரிய படிப்பெல்லாம் படிக்கலையிங்குறாரு..

தியேட்டர விட்டு வெளிய வர்றதுக்குள்ள மீண்டும் கண்ணைக் கட்டிடுச்சு. ஜனாதிபதி கிட்ட இந்தக் கேள்வியக் கேட்டே ஆகனுமுன்னு முடிவுக்கு வந்தாச்சு அப்புறம் தான் தெரியுது லோக்கல் ஸ்டேசன் இன்ஸ்சை பார்க்கவே நமக்கு நாலு நாள் ஆகுமுங்கறது .

சரி சையின்ஸ் வாத்தியாருக்கு ஒரு போனை போட்டு நம்ம குழப்பத்தைச் சொன்ன தம்பி, அது போலி அறிவியல் என்றார். அட போலி டாக்டரு, போலி சாமியாரு கேள்விப்பட்டிருக்கேன் அதென்ன போலி அறிவியல் அப்படின்னா??? சையின்ஸ் வாத்தியாரு கூகுள் வாத்தியார் கிட்ட கேட்க சொல்லிட்டாரு . மறுபடியும் லேப் - டாப் விரிச்சு .விக்கி பிடியாவில் போலி அறிவியல் எனத்தேடிப்பார்த்தபோது ..

போலி அறிவியல் (Pseudoscience) என்பது அறிவியல் என பிழையாக அறிமுகப்படுத்தப் பட்ட, ஆனால் ஆதார அறிவியலுக்கு உடன் படாத, நம்பகமான சோதனைக்கு உட்பட்டிருக் காத அல்லது அறிவியல் அங்கீகாரமற்ற உரிமை வலியுறுத்தல், நம்பிக்கை அல்லது பயற்சியாகும்.

போலி அறிவியல் தெளிவற்ற, எதிர்மறையான, மிகைப்படுத்திக் கூறும் அல்லது ஆதார பூர்வமற்ற பாவனையின் தன்மையைக் கொண்டிருக்கும். அதாவது, தவறென மறுத்தலில் கடுமையான முயற்சியைவிட உறுதிப்படுத்தலில் ஓர் மிகு நம்பிக்கை. ஏனைய நிபுணர்களினால் மதிப்பீடலுக்கு திறந்த தன்மை அற்ற மற்றும் அறிவார்ந்த விளக்க வளர்ச்சிக் கொள்கைகளுக்கு முறையான நடைமுறையின் பொதுவான தன்மை இல்லாமை என்பனவாகும்.

அப்படின்னு சொல்லுச்சு .

ஒன்னா மதமுன்னு சொல்லு இல்ல சையின்ஸ்ன்னு சொல்லு இதென்ன ரஜினி அரசியலுக்கு வர்றது மாதிரி அப்படின்னு ஆராய்ந்து பார்த்தா...இந்திய வரலாற்றில் பகவத் கீதை நூலில் ஆர்.சி.மஜூம்தார் கூறுகிறார்.

“இந்தியப் பண்பாட்டின் மிகப்பெரிய விநோதம் என்னவென்றால் அது பழைய நடைமுறை களோடு தன்னை இணைத்துக் கொள்கிறது. காலப்போக்கில் ஏற்படுகின்ற மாற்றங்களால் பழைமையான மக்கிப்போய் உருக்குலைந்த வைகளாகக் கிடப்பினும் அவற்றையும் முடிந்த மட்டும் போற்றிப் பாதுகாத்துக் கொள்கிறது”

ஆகையால்தான் இந்துக்கள் மரங்களையும், விலங்குகளையும், கற்களையும் வணங்குகிறார்கள். நல்ல உடல் நலம் வேண்டும் என்பதற்காக தாயத்துகளையும், மந்திரித்த காப்புகளையும், ஆவிகளையும், மந்திரம், தந்திரங்களையும் நம்புகிறார்கள். கோள்கள் இடம் மாறுவதைப் பொருத்தே தங்களது வாழ்க்கையின் வெற்றிகள் அமையும் என்று நம்பி ஜோதிடம் பார்க்கிறார்கள்.

ஓர் இந்துவின் உள்ளத்தில் பழங்கால கருத்துகளும் காட்டிமிராண்டி காலத்து மூட நம்பிக்கைகளும் நிறைந்திருப்பதோடு, நவீனத் தத்துவக்கோட்பாடுகளும், அறிவியல் கண்டுபிடிப்புகளும் நிறைந்துள்ளன. குழறுபடி நிறைந்த இந்த அலங்கோலம் தான் ஓர் இந்தியனைத் தெளிவாகச் சிந்திக்கவிடாது தடுக்கிறது. அறிவியல் கருத்துகள் அவனை ஒரு பக்கமாக இழுத்துச்சென்றால் அதற்கு நேர் எதிர் திசையில் பழங்கால மூட நம்பிக்கைகள் அவனை இழுத்துச்சொல்கின்றன. ஓ அதானா மேட்டரு

தம்பிகளா பெரியாருங்கற தாயத்த தொலைத்து விடாதீர்கள் அப்புறம் பீ.கே அமீர்கான் மாதிரி கடவுளத்தேடி அலையவிட்டுவானுக . ஆனா !!!

நம்ம கவலையெல்லாம் நாடாளுமன்றத்துல தூங்கற நம்ம பொன்னார் மாதிரி ஆளுக கழுத்தில எலுமிச்சம் பழத்தை கட்டிடுவாங்க ??? என்பதும், புஸ்பக விமானம் பாதி வழியில பெட்ரோல் இல்லாம நின்னுச்சுன்னா மீதி இருக்கற நாடுகளை எப்படி மோடி சுத்திபார்ப்பாரு??? என்பது மட்டுமே .

திராவிடர் இயக்கக் காலங்களில் பெரும்பாலான தேநீர்க்கடைகளும் சலூன்களும் பெரியார் படிப்பகங்களாகவே இயங்கின. முடி திருத்தகங்களிலும், தேநீர்க்கடைகளிலும் திராவிடர் இயக்க ஏடுகளைப் படிக்கும் வாய்ப்புகள் இருந்தன. ஆனால் இன்று தேநீர்க்கடைகள் அய்யங்கார் பேக்கரிகளாக, கோவை பேக்ஸ், கே.ஆர் பேக்ஸ் என மாற்றம் பெற்று விட்டன. சலூன்கள் சிறு அளவிலான ஸ்பாக்களாக மாறி வருகின்றன.

அண்மைக்காலங்களில் பொது மக்களிடையே புத்தகங்களைப் படிக்கும் ஆர்வம் குறைந்துள்ளது. புத்தகக் கண்காட்சிகளின் விற்பனை கோடிகளில் உள்ளன என்றாலும் வெகுமக்களிடையே ஏடுகளைப் படிக்கும் ஆர்வம் குறைந்து வருகிறது. அடுத்த தலைமுறை இளையசமுதாயத்திடம் அச்சிட்ட புத்தகங் களைத் தொட்டுப் பார்க்கும் பழக்கமே குறைந்து வருகிறது. பலவண்ணக் கவர்ச்சிப் படங்களுடன், கிசுகிசு செய்திகளை வெளியிட்டுவரும் ஏடு களைக்கூடப் படிக்கும் நிலையில் இன்றைய இளைஞர்கள் இல்லை.

அனைவரும் சமூகவலைத்தளங்களில், இணையதளங்களில் வாழ்ந்து வருகிறார்கள். நமது சராசரி வாழ்வின் பெரும்பாலான பணிகள் இணையதளத்தின் பயன்பாடு இல்லாமல் நடப்பதில்லை. ஆண்டவன்களின் அருளைக்கூட ஆன்லைனில்தான் பெறமுடியும் என்ற நிலை உருவாகி விட்டது. எனவே நமது காலத்தில் இருந்த படிப்பகங்களின் நிலை தற்போது கேள்விக்குறியாக உள்ளது. அவை அந்தந்தக் கட்சிகளின் அலுவலகமாக மட்டுமே இயங்கிவருகின்றன.

இந்தச்சூழலில் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. படிப்புவட்டத்துக்குத் தடையை நீக்கிவிட்டோம்.ஆனால் படிப்பதற்கோ விவாதிப்பதற்கோ தரவுகள் இருக்கின்றதா? பெரியார், அம்பேத்கர், ஜோதிபா பூலே, சாகுமகராஜ் போன்ற பல்வேறு தலைவர்கள் பேசிய, எழுதிய கருத்துக்களை இளைய சமுதாயம் எளிதில் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? படிக்க முடியுமா? என்று யோசித்தோம்.

தத்துவங்களைப் பரப்பும் சிறு சிறு ஏடுகள் தற்போது அழிந்தே போய்விட்டன. அச்சுஊடகத்தை அடுத்தலைமுறை எட்டிப் பார்ப்பதில்லை. அப்படியானால் இணைய ஊடகத்தில் இந்தத் தலைவர்களின் கருத்துக்கள் எந்த அளவில் கிடைக்கின்றன என்று பார்த்தோம். இணையத்தில், கூகுளில் தேடினால் அப்பளம் தயாரிப்பதிலிருந்து அணுகுண்டு தயாரிப்பதுவரை அனைத்துச் செய்திகளையும், அவை சார்ந்த அறிவியலையும் அறிந்து கொள்ளமுடியும். அப்படி கூகுளைத்தேடித்தான் இன்று பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே அடுத்த தலைமுறைக்குத் தகவல் போய்ச் சேர வேண்டுமானால் படிப்பகங்கள் இணைய யுகத்துக்குத் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

**அம்பேத்கரின் எழுத்துக்களும் பேச்சுக்களும்**

தோழர் அம்பேத்கருடைய எழுத்துக்கள், பேச்சுக்கள் ஆகியவை இணைய தளங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இணைய தளங்களிலிருந்து இலவசமாக, எளிதாக, எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் எழுத்துருக்கள் வடிவிலும் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக,

*www.ambedkarfoundation.nic.in/html/pub.htm, www.drambedkarbooks.com/dr-b-r-ambedkar-books, www.librarything.com, www.ambedkar.org/, www.mahatmaphule.com/home.php, www.goodreads.com/work/quotes/3118641-writings-and-speeches, www.angelfire.com/ak/ambedkar/BRManusmriti.html, www.ambedkarcaravan.com/dr-b-r-ambedkar-books/, https://books.google.co.in/*

ஆங்கிலம், இந்தி மொழிகளில் அம்பேத்கரின் கருத்துக்கள் மேற்கண்ட இணைய தளங்களில் இலவசமாகவே கிடைக்கின்றன. காலத்துக்கேற்ற வடிவங்களில் அம்பேத்கரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் தகவமைக்கப் பட்டுவிட்டன.

**பெரியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும்???**

தமிழ்நாட்டில் தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த சென்ற நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே ஆங்கிலத்தில் ‘ரிவோல்ட்’ ஏட்டை நடத்தியவர் பெரியார். தமிழில் குடிஅரசு தொடங்கிய 3ஆண்டு களிலேயே முற்போக்காகச் சிந்தித்து, திட்ட மிட்டு ஆங்கில ஏட்டை நடத்தினார். ஆனால் அடுத்த தலைமுறை முழுக்க முழுக்க இணைய உலகில் வாழும் இந்தக் காலத்தில் அவரது எழுத்துக்களும், பேச்சுக்களும் இன்னும் இணைய உலகில் நுழையவே இல்லை என்ற வேதனையான உண்மையை சுயவிமர்சனமாக வெளியிடுகிறோம்.

விடுதலை, உண்மை, பெரியார் முழக்கம், சிந்தனையாளன் போன்ற ஏடுகள் அந்தந்த அமைப்புகளின் இணையதளங்களில் கிடைக்கிறது. அவையும் பெரும்பாலும் அந்தந்த

அமைப்புகளின் செய்திகளையும் சேர்த்துத் தாங்கிவரவேண்டிய அவசியமான சூழலில் இருக்கின்றன. பெரியார் திராவிடர் கழகம் 2011 இல் பெரியாரின் எழுத்துக்கள் பேச்சுக்கள் அடங்கிய குடி அரசு தொகுப்புக்களை இலவசமாக வெளியிட்டது. அச்சிட்ட புத்தகங்களை முன்பதிவுத் தொகைக்கு வெளியிட்ட அதேநாளில் www.periyardk.org என்ற இணையதளத்தில் இலவசமாக எழுத்துருக் களாகவும், பி.டி.எஃப் கோப்பாகவும் வெளியிட்டது. தற்போது அந்தத்தளம் செயல்படவில்லை.

தற்போது எந்த இணையதளத்திலும் யூனிகோட் எழுத்துவடிவில், எழுத்துக்களாக எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் பெரியாரின் ஏழுத்துக்களோ, பேச்சுக்களோ இல்லை. பூங்குழலி, கீற்று இரமேஷ், தமிழ்ஓவியா, தமிழச்சி போன்ற பலதோழர்கள் தங்களது வலைப்பூக்களிலும், இணையதளங்களிலும் பெரியாரின் சில கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். பெரியார் இயக்கங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லாத தமிழகம்.நெட் என்ற தளத்தில் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட பி.டி.எஃப் கோப்புகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பெரியாரைப் பற்றிய முழுமையான தகவல்கள் அடங்கியதளம், இலவசமாக யூனிகோட் எழுத்துவடிவில் எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் தளம் என்று எதுவும் இல்லை.

அதேபோல பெரியாரின் போராட்டங் களின் பெயரையோ, நிகழ்வுகளின் பெயரையோ இணைய தளங்களில், கூகுளில் தேடினால் ஆதாரப்பூர்வமாக, முழுமையாகவோ எந்தத் தகவலும் கிடைப்பதில்லை. ஆயிரக்கணக்கான சிறு நூல்களை மிக மிக மலிவான விலையில் வெளியிட்டவர் பெரியார். அதற்குக்காரணம் குறைந்த விலையில் கருத்துக்கள் போய்ச்சேர வேண்டும் என்பதைவிட, மக்களிடை கருத்துக் கள் எளிதாகச் சென்று சேர(Easy Access) வேண்டும் என்பதே நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.

இந்த இணைய யுகத்தில் சமூகவலைத் தளங்களில் பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் யூனிகோட் எழுத்து வடிவில் உள்ள இணையதள லிங்க்குகள் தான் மிகவும் அடிப்படைத் தேவை. ஆனால் பெரியாரின் எந்த சிறு நூலும் யூனிகோட் எழுத்து வடிவில் இலவசமாக இணையதள இணைப்பாகக் கிடைப்பதே இல்லை. யாரும் அந்த முயற்சியைச் செய்யவில்லை.

மிக முக்கியமாக, ஆங்கிலத்தில் பெரியாரின் எழுத்துக்கள் என்று இணைய தளத்தில் எதுவுமே இல்லை. பெரியார் தி.க வெளியிட்ட ரிவோல்ட் தொகுப்பு மட்டும் பி.டி.எஃப் வடிவில் மட்டும் உள்ளது. இந்தியிலும் எந்த வெளியீடும் இல்லை.

அதுபோல இன்று முன்னணி பதிப்பகங்கள் அனைத்தும் தமது வெளியீடுகளை ஒலிப்புத்தகங்களாகவும் வெளியிட்டு வருகின்றன. பெரியார் கருத்துக்களை அப்படி ஒலிப்புத்தகங் களாக தமிழில்(Audio Books)வெளியிடும் திட்டத்தையும் வைத்துள்ளோம்.

இணையதளங்களில் தமிழிலும் இல்லை, ஆங்கிலத்திலும் இல்லை, இந்தியிலும் இல்லை, இந்தியத்துணைக்கண்டத்தில் பயன்படுத்தப்படும் வேறு எந்த மொழிகளிலும் அடுத்த தலைமுறைக்கு ஏற்ற வகையில் பெரியாரின் கருத்துக்கள் பதிவுசெய்யப்படவில்லை. இந்த நிலையில் பூனேயிலும், ஆமதாபாத்திலும், டெல்லியிலும் ஐஐடி க்களில், ஐஐஎம் களில் பெரியார் படிப்பு வட்டத்தைத் தொடங்கியதால் என்ன நன்மை? அவற்றுக்கான தடைகள் நீக்கப்படுவதால் என்ன பயன்?

**காட்டாறு குழுவின் அடுத்த இலக்கு**

இந்த நிலையில் காட்டாறு குழு சென்ற மாதம் மே 17 அன்று 1117 சந்தாக்களை திட்டமிட்டுத் திரட்டி முடித்தது. காட்டாறு ஏட்டின் நிதிச்சிக்கல் ஓரளவு சரிசெய்யப் பட்டுள்ளது. எனவே காட்டாறு குழுவின் அடுத்த இலக்காக மேலே கூறிய பெரியார் இணையதள தொகுப்புப் பணியை மேற்கொள்ள இருக்கிறோம்.

திராவிடர் இயக்கங்கள், மதவாத மத்திய, மாநில அரசுகளின் இந்துமதப் பண்பாட்டுத் திணிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அன்றாடம் களமிறங்கிப் போராட வேண்டிய கட்டாயச்சூழலில் இருக்கின்றன. எனவே இந்த அடிப்படையான - பெரியார் எழுத்துக்களை காலத்திற்கேற்ற முறையில் தகவமைக்கும் பணியைச் செய்யவில்லை என எந்த அமைப்பையும் விமர்சிப்பது நேர்மையற்றது என்பதை களத்தில் இருக்கும் நாம் அறிவோம்.

**28.06.15 ஞாயிறு திட்டமிடல். 01.07.2015 பணி தொடக்கம்**

பெரியார் எழுத்து, பேச்சுக்களை முழுமையாகத் தொகுத்து எவரும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இலகுவாகப் பயன்படும் வடிவில் யூனிகோட் எழுத்து வடிவில் இணையதளத்தில் பதிவேற்றும் பணியை ஜூலை 1 முதல் தொடங்க உள்ளோம்.

உலகெங்கிலும் வாழும் பெரியார் தொண்டர்கள், அவர்கள் எந்த அமைப்பில் பணியாற்றினாலும், அந்தந்த அமைப்பின் தலைமையில் அனுமதி பெற்று ஒன்றிணைந்து பணியாற்ற வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

தனிப்பட்ட எந்த ஒரு நபரின் கட்டுப் பாட்டிலோ, எந்த ஒருஅமைப்பின் கட்டுப் பாட்டிலோ இந்தப்பணி நடைபெறாது. பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குடி அரசு தொகுப்புப்பணியில் முக்கியப் பணியாற்றிய தோழர்கள் சிலர் இணைந்துதான் காட்டாறு வெளிவருகிறது. அந்தத்தோழர் களோடு தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யத் தெரிந்தவர்கள், இந்தியில் மொழிமாற்றம் செய்யத் தெரிந்தவர்கள், தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்யத் தெரிந்தவர்கள், எழுத்துக்களை மெய்ப்புப் பார்க்கும் அனுபவம் உள்ளவர்கள், இணையதள வடிவமைப்பு செய்யத் தெரிந்தவர்கள், மொபைல் அப்ளிகேசன் வடிவமைப்பளர்கள் ஆகியோர் இணைந்து இப்பணியைத் தொடங்க வேண்டும்.

மேற்கண்ட பணிகளை நமது அடிப்படைக் கடமையாக எண்ணி, பொருளாதார ரீதியாக எதையும் எதிர்பாராமல் உழைப்புக் கொடுக்க விரும்புபவர்களை மட்டும் அழைக்கிறோம். தட்டச்சு செய்வதோ, மொழிமாற்றம் செய்வதோ, பிழைதிருத்துவதோ, கருத்துக்களைச் சரிபார்ப்பதோ, இணையதள வடிவமைப்போ, ஒலிப்புத்தகங்கள் தயாரிப்போ, எந்தப் பணியையும் தங்களது இடத்திலிருந்தே மேற் கொள்ளலாம். திண்டுக்கல்லில் வந்து தங்கி பணியாற்ற விரும்புபவர்களுக்கு எளிமையான உணவும், தங்குமிடமும் மட்டும் ஏற்பாடு செய்யப்படும்.

எந்தெந்தப் பணிகளை யார் யார் பொறுப் பேற்றுச் செய்வது என்பது குறித்துத் திட்டமிட வரும் 28.06.15 ஞாயிறு அன்று திண்டுக்கல்லில் காட்டாறு குழு கூடுகிறது. திட்டமிடலுக்கு வர இயலாத தோழர்கள் மின்னஞ்சலில் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

**திராவிடர் இயக்கங்களின் தலைவர்களுக்கு வேண்டுகோள்**

முக்கியமாக கருத்துத் திரிபுவாதம் ஏற்பட்டுவிடாமல் தடுக்கும் தன்மை வாய்ந்த - பெரியார் எழுத்துக்களையும் பெரியாரியலையும் நன்கு அறிந்து ஆய்ந்த அறிஞர்கள், தலைவர்கள், நூலகங்கள், பதிப்பகங்கள் என அனைவரது ஒத்துழைப்போடும், அனைவரது அனுமதி யோடும்,ஆதரவோடும்,உதவியோடும் இந்தப் பணியைத் தொடங்க நினைக்கிறோம்.

திராவிடர் கழகத் தலைவர் தோழர் கி.வீரமணி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர்மணி, தந்தைபெரியார் திராவிடர் கழகத் தலைவர் கு.இராமக்கிருட்டிணன், மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தோழர் வே.ஆனைமுத்து, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் தோழர் சுப.வீரபாண்டியன், தலித்முரசு ஆசிரியர் புனிதப்பாண்டியன், எஸ்.வி.இராஜதுரை, அ.மார்க்ஸ், பசு.கவுதமன், செந்தலை கவுதமன் போன்ற பல தலைவர் களையும், அறிஞர்களையும் நேரில் சந்தித்து உதவிகளைக்கேட்க உள்ளோம்.

முதற்கட்டமாக www.periyarwritings.org என்ற பெயரில் ஒரு இணையதளத்தைப் பதிவுசெய்துள்ளோம். இதில் முதலில் பெரியாரின் சிறுநூல்களை உரியவர்களிடம் தேவையான அனுமதிகளைப்பெற்று யூனிகோடாக பதிவேற்றம் செய்வோம். அடுத்து, குடி அரசு, ரிவோல்ட், பகுத்தறிவு, புரட்சி, விடுதலை ஏடுகளில் பெரியார் பேசிய, எழுதியவற்றைத் தொகுத்து யூனிகோட் வடிவிலும், பி.டி.எஃப் வடிவிலும் பதிவேற்றம் செய்ய உள்ளோம். அடுத்து, ஒரு 10 தலைப்புகளில் பெரியாரின் பேச்சுக்களைத் தேர்வு செய்து ஆங்கிலம், இந்தியில் மொழிபெயர்த்து பதிவேற்றம் செய்ய உள்ளோம். அனைத்தையும் மொபைல் அப்ளிகேசனாகவும் வெளிடுவோம். தொடர்ச்சியாகப் பணிகளை மேற்கொள்வோம். வரும் 2015 செப்டம்பர் 17 தோழர் பெரியாரின் பிறந்தநாள் அன்று முதற்கட்டப் பணிளை முடித்து இணையதளத்தைத் தொடங்கிவைக்க உள்ளோம்.

**அனைத்துப் பெரியார் இயக்கங்களின் தோழர்களும், தலைவர்களும் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம். அனைத்து தலித் அமைப்புகள், பொதுவுடைமை அமைப்புகள், முற்போக்கு அமைப்புகளின் தோழர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம்.**

காட்டாறு





மே.கா.கிட்டு

# அறிவும், துணிவும் ஒருங்கே கொண்ட செயல்வீரர் தோழர் லூ.கருப்பரசன்

செயல்வீரர் தோழர் லூ.கருப்பரசன் அவர்கள் சேலம் மாவட்டம் மேட்டூர் அணை பி.சா.லூகாஸ்—இரத்தினம்மாள் இணையருக்கு 06.06.1960 அன்று பிறந்தவர். இவருக்கு இரண்டு சகோதரர்கள், ஒரு சகோதரி. இவர் இரகு, பெஞ்சமின் என அறியப்பட்டார். தோழர்கள் லூ.க என்றே குறிப்பிடுவார்கள். 12 ஆம் வகுப்பு திறந்தவெளிப்பல்கலைக்கழகத்தில் எம்.ஏ முதலாம் ஆண்டு தேர்ச்சிபெற்றவர். படிக்கும் போதே தன் தமிழாசிரியர் சு.அழகுமன்னன் அவர்களால் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டார்.

1981 ஆம் ஆண்டு திராவிடர் கழகம் நடத்திய மனுதர்ம எரிப்புப்போராட்டத்தில் பங்கேற்றுக் கைதானார். அதன்பின் திராவிடர்கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றும், பலமுறை சிறைப்படுத்தப்பட்டும் உள்ளார். 1982 மார்ச்சில் திராவிடர்கழகம், மேட்டூர் வட்ட பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாடு வெற்றிபெறப் பெரும்பங்கு வகித்தவர் கருப்பரசன்.

1984 கொளத்தூர் அருகே தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பயிற்சிப் பாசறை அமைக்கப் பட்டபோது முழுதாக அங்கேயே தங்கி புலிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். புலிகள் இயக்க மூத்த தலைவர்கள் மாத்தையா, பொன்னம்மான், புலேந்திரன், திலகர், யோகி போன்றோர்களோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்தவர்.

நல்ல கவிஞர், பல கவியரங்குகளில் பங்கேற்றவர். திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் தற்போது சிறப்பாக நடத்திவரும் டி.கே.ஆர் இசைக்குழுவில் பாடப்படும் அனைத்துப் பாடல்களும் தோழர் கருப்பரசனால் எழுதப்பட்டவையே.

தி.க வின் சேலம் மாவட்ட இளைஞரணி தலைவராகப் பணியாற்றியவர். தி.க தலைமை தமது மாநாட்டுப் பேரணிகளில் சிறப்பாக அணிவகுத்து வரும் மாவட்டத்துக்கு பரிசு என அறிவித்த ஆண்டிலிருந்து, தொடர்ந்து சேலம் மாவட்டம் முதல்பரிசைப் பெற்றது. அதற்குப் பெரும் காரணமாக இருந்தவர் கருப்பரசன். ‘விடுதலை’ ஏட்டின் செய்தியாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர்.

திராவிடர்கழக மாவட்டச் செயலாளராக கோவை மத்திய நிர்வாகக்குழுவில் நியமிக்கப்பட்டார். ஆனால் சில மாதங்கள் பணியாற்றிவிட்டு, மூத்தோர் இருக்க தான் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றக்கூச்சப்பட்டு, பொதுச்செயலாளர் அவர்களை அணுகி பொறுப்பு மாற்றக் கேட்டுகொண்டார். அதன்பிறகு மாவட்ட அமைப்புச்செயலாளராகப் பணியாற்றிய செயல்வீரர் லூ.கருப்பரசன் 03.08.1999 அன்று மறைந்தார்.

செயல்வீரர் லூ.கருப்பரசனின் படத்திறப்பு நிகழ்ச்சி 20.11.1999 அன்று சேலம் மாவட்டம் மேட்டூர்அணை பாரதிநகரில் மாலை 4 மணிக்கு ‘லூக’ வின் வீட்டுமுன் நடைபெற்றது. அதில் அப்போது திராவிடர்கழக மாநில நகராட்சி அமைப்புச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் கொளத்தூர் மணி அவர்கள் பேசும்போது,

“தோழர் கருப்பரசன் மிகச்சிறந்த உழைப்பாளி. அவரிடம் கொள்கைக்காக உழைப்பதில் போட்டிபோட யாராலும் முடியாது. சீரிய சிந்தனையாளர் அவர். நான் புலிகள் அமைப்பில் இருந்த அந்தப் பொறுப்பாளர்களிடம் மரியாதையுடன் பழகுவேன், பேசுவேன். ஆனால் ஒத்த வயது காரணமாக, நண்பர்களாக இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் பொறுப்பாளர்களும் கருப்பரசனும் வாடா, போடா எனப்பேசி நட்புறவுடன் பழகியவர்கள். தொலைபேசியில் என்னிடம் கேட்டார்கள். இந்த இழப்புக்கு என்னால் பதில் சொல்லமுடியவில்லை ” என்றுகூறி, கண்ணீருடன் அதற்குமேல் பேசமுடியாமல் மேடையைவிட்டு இறங்கிவிட்டார்.

தோழர் லூ.கருப்பரசனின் படத்தைத் திறந்துவைத்துப் பேசிய திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்கள் பேசியபோது, “மணி அவர்கள் தெளிந்த சிந்தனைவாதி. எளிதில் உணர்ச்சிவசப்படாதவர். அவரின் மனதில் ஆறாத்துயரம் ஏற்பட்ட நிலை கண்டேன். செயல்வீரர் லூ.கருப்பரசன் எப்படிப்பட்ட சீரிய உழைப்பாளி என்பதை இது காட்டுகிறது” என்று குறிப்பிட்டார்.

அதே நாளன்று மாலை 6 மணிக்கு மேட்டூர்அணை பேருந்துநிலையத்தில் கருப்பரசனின் நினைவுக்கல்வெட்டைத் திறந்துவைத்து, திராவிடர் கழகக் கொடியேற்றி வைத்தார் மானமிகு தோழர் வீரமணி அவர்கள். மேட்டூர்அணை பெரியார் படிப்பகத்தில் ‘செயல்வீரர் லூ.கருப்பரசன் நினைவு நூலகத்தை’ யும் திறந்து வைத்தார். நூலகத்தில் தோழர் லூ.கருப்பரசன் வைத்திருந்த சுமார் 200 க்கும் மேற்பட்ட நூல்கள் இடம்பெற்றுள்ளன.

தோழர் கருப்பரசனின் நினைவாக கொளத்தூர் ‘புலிகள் உழவுப் பணிமனைத்’ தோழர் க.பெரியசாமி-இலட்சுமி இணையர் தங்களது மகனுக்கு ‘கருப்பரசன்’ என்று பெயர் சூட்டியுள்ளனர். தோழர் கருப்பரசன் ‘இரகு’ என்று அழைக்கப்பட்டதால் மேட்டூர்அணை கோ.அன்பு பழனி அவர்கள் தனது வாடகை சைக்கிள் நிலையத்திற்கு ‘இரகு’ எனப் பெயர் சூட்டியுள்ளார்.

தோழர் கருப்பரசனின் பிறந்த நாள் ஜூன் 6 ஆகும். அவரது நினைவாக சில குறிப்புகளை மட்டும் வெளியிட்டுள்ளோம். ஆகஸ்ட் மாத காட்டாறு ஏட்டில் இன்னும் விரிவான தகவல்கள் வெளியாகும்.

## ஆரோக்கியத்துடன் வாழ....

# தினமும்

50 மில்லி
**நெல்லிச்சாறு**
ஒரு தேக்கரண்டி
**தேன்நெல்லி**

fssai
22414042000421



- இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்கும்.
- இரத்தம் சுத்திகரிக்கப்படும்.இதயத்தை பலப்படுத்தும்.
- இரத்தத்தில் ஹிமோக்ளோபினை உயர்த்தும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.
- உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கறைக்கும்.
- உடல் எடையைக் குறைக்கும். குடலியக்கத்தைச் சீராக்கும்.
- பசியின்மையைப் போக்கும். செரிமானக் கோளாறுகளைச் சரிசெய்யும்.
- மலச்சிக்கலைத் தீர்க்கும். கர்ப்பப்பை கோளாறுகள்,
- மாதவிடாய் சிக்கல்களைச் சரிசெய்ய உதவும்.
- கல்லீரலைப் பலப்படுத்தும். முடி உதிர்வதைத் தடுக்கும்.
- இளநரையிலிருந்து காக்கும். அல்சரைப் போக்கும்.
- தோல் நோய்களிலிருந்து காக்கும். உடல்வெப்பத்தைத் தணிக்கும். முகப்பொலிவைக் கொடுக்கும்

**Sirumalai**

**நெல்லிச்சாறு**

**தேன்நெல்லி**

Mfd by:
SIRUMALAI FOODS
Dindigul.624 003.TN
www.sirumalaifoods.com
97873 20011

# சிறுமலை ஃபுட்ஸ்

தொடர்புக்கு: 97873 20011



வெளியீடு: சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com